Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 53 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை
(04.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 18, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

## சினோபெக்கின் சேவை நாடுமுழுவதும் ஆரம்பம்



அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

02பக்கம்

# இரத்தாகும் ஒப்பந்தங்கள்!



## பாதுகாப்பு, வெளிநாட்டு அமைச்சுகளின் அனுமதியின்றி புதியவற்றை மேற்கொள்ளாதிருக்க ஜனாதிபதி ரணில் உத்தரவு

02பக்கம்

### கமெண்ட் கந்தர்...



இலங்கையிலும் தமிழர் ஒருவர் ஜனாதிபதியா இருக்கலாம்.. சின்ன செலவொன்றை செய்து ரணில் விக்கிரமசிங்கம் என்று பெயரை மாற்றினால் போச்சு.. சிம்பிள்..

## உணவு விஷமானதால் சியம்பலாபிட்டிய வைத்தியசாலையில்



நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய திடீர் சுகயீனம் காரணமாக நேற்றுமுன்தினம் (02) கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில்...

02 பக்கம்



நாட்டின் பல பாகங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கிறது. கடும் மழையால் கொழும்பின் பல பகுதிகள் நீரில் மூழ்கி வெள்ளக்காடாக காட்சியளித்தன. படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

## வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றம் அவசியம்

### மைத்ரி வலியுறுத்து

நாடென்ற அடிப்படையில் விருத்தியடைய வேண்டுமெனில் அனைவரும் இலங்கையர் என்ற ஒற்றுமை அவசியமென்றும் வெளிநாட்டு உறவுகளுக்கு அப்பால் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமென்றும் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார். 02 பக்கம்

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண இருநாடுகளின் குழு அமைப்பு

### இந்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் முருகன்



தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இருநாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளதெனவும் கச்சதீவை மீட்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்... 02 பக்கம்



## 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர கொள்வனவின் கீழ் 400 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு, வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## ராஜகுமாரி மரணம்: பின்னணிச் சம்பவங்கள்!

02பக்கம்



### உஷ்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பாக பரபரப்பு வீடியோவொன்றை சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் நாளை செவ்வாய்க்கிழமை வெளியிடவுள்ளதாக தகவல். அதனை தடுக்க இலங்கை எடுத்த இராஜதந்திர முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளதாம்.

இந்த வீடியோ வெளிவருமாயின் அது கொழும்பு அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாமென பேசப்படுகிறது.

## எனக்கே வியப்பளித்த வெற்றி

### தர்மன் சண்முகரத்னம் கருத்து



ஜனாதிபதித் தேர்தலில் இந்தளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருப்பது தமக்கே வியப்பளிப்பதாக சிங்கப்பூரின் ஒன்பதாவது பதவியேற்கவுள்ள ஜனாதிபதியாகப் தர்மன் சண்முகரத்னம் தெரிவித்துள்ளார். 02 பக்கம்





தொழில் மற்றும் முதலீட்டு மூலதன தேவைகளுக்கு குறைந்த வட்டியுடனான கடன்

நலிவடைந்திருக்கும் வியாபாரங்களை மீள கட்டியெழுப்பும் நிதி மறுசீரமைப்பு

புதிய தொழில்முனைவோருக்கான வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதித்துறை வசதிகள்

மேலதிக விபரங்களுக்கு இப்பொழுதே 0112 481608 / 0112 481356 / 0112 481426 க்கு அழையுங்கள் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

## எனக்கே வியப்பளித்த...

தம்மீது நம்பிக்கை வைத்து மக்கள் ஐக்கியமாக வாக்களித்துள்ளனர். அந்த நம்பிக்கை பொய்க்காமல் மேலும் திறம்படச் செயலாற்ற வேண்டும் என்பதை முக்கியமாகக் கருதுவதாக அவர் கூறினார்.

இது நம்பிக்கை தரும் வருங்காலத்துக்கும் ஒற்றுமைக்காகவும் அளிக்கப்பட்ட வாக்குகள் என்றார் அவர்.

66 வயது தர்மன் 70.4 வீத வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இங் கொக் சொங் 15.72 வீத வாக்குகளையும் டான் கின் லியான் 13.88 வீத வாக்குகளையும் பெற்றனர்.

தேர்தல் முடிவுகள் இப்படி அமைந்தது சிங்கப்பூருக்கு மிகவும் நல்லது என்றும் வாக்காளர்களிடையே இத்தகைய ஒற்றுமை இருக்கும் என்பதைத் தாம் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

“சில உணவங்காடிகளுக்குச் சென்றபோது மக்கள் பலர் எனக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். நானும் அவர்களுக்கு வாழ்த்து கூறினேன்,” என்று தோ பாயோ ஹப் மையத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் சொன்னார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு சனிக்கிழமையன்று தர்மன் பல்வேறு இடங்களுக்குச் சென்றார்.

தேர்தலில் தமக்குக் கிடைத்த மகத்தான வெற்றியைப் பற்றிப் பேசிய தர்மன், “நம்பிக்கை, நம்பிக்கை தரும் எதிர்காலம், புதிய வழிகளிலும் ஒன்றுபட்டு செயல்படும் எண்ணம் ஆகியவற்றைச் சித்திரிக்கும் வண்ணமே தேர்தல் முடிவுகள் உள்ளதாக உறுதியாக நம்புகிறேன்,” என்று கூறினார்.

சிங்கப்பூர் உருவெடுத்துவரும் முறையைக் கருத்தில்கொள்ளும்போது இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு மைல்கல்லாக அமைந்தது. இத்தேர்தலில் இன அடிப்படையில் மட்டும் போட்டி அமையவில்லை என்பதை எடுத்துக்காட்டிய அவர், எந்தத் தரப்பையும் சார்ந்திராத ஓர் ஜனாதிபதியை மக்கள் விரும்புவதையே முடிவுகள் காண்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமது பல ஆண்டுகால அரசியல் அனுபவத்தை வாக்காளர்கள் குறையாகக் கருதவில்லை என்பதையும் அதை வைத்து அவர்கள் தம்மைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை என்பதையும் தேர்தல் முடிவுகள் காட்டியதாக தர்மன் சொன்னார்.

தமக்கு வாக்களிக்காதோரைப் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டபோது, அவர்களுக்கும் தம்மால் முடிந்தவரை சேவையாற்றப்போவதாக கூறினார்.

“இத்தனை பேர் என்னைத் தேர்ந்தெடுப்பர் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்படியென்றால் பொதுவாக ஆளுங்கட்சிக்கு வாக்களிக்காத பலர் இதை ஓர் அரசியல் சம்பந்தப்பட்ட தேர்தலாகப் பார்க்கவில்லை என்று அர்த்தமாகும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 04 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால் மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயம் நிலவுவதாகவும் மக்கள் மிக அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலி மாவட்டத்தில் பத்தேகம, எல்பிட்டிய மற்றும் நாகொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அவற்றை அண்மித்த பிரதேசங்களுக்கும் களுத்துறை மாவட்டத்தில் பாளிந்தநுவர, மத்துகம, வலல்லாவிட்ட, புளத்சிங்கள மற்றும் இங்கிரிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அவற்றை அண்மித்த பிரதேசங்களுக்கும் கேகாலை மாவட்டத்தில் புலத்கொஹூபிட்டிய, தெஹியோவிட்ட, தெரணியகலை, யட்டியந்தோட்டை, ருவன்வெல்ல மற்றும் வரகாபொல ஆகிய பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் அவற்றை அண்மித்த பிரதேசங்களுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் கிரியெல்ல, அயகம, கலவானை, இரத்தினபுரி, எஹலியகொட மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

## மீனவர் பிரச்சினைக்குத்...

இராமேஸ்வரத்தில் மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புருஷோத்தம ரூபாலா இரு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் இராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலில் சனிக்கிழமை காலை சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து தனுஷ்கோடி சென்று பார்வையிட்டார்.

பின்னர் இராமேஸ்வரம் வந்த மத்திய அமைச்சர் புருஷோத்தம ரூபாலாவும் மத்திய மீன்வளம் துறை இணை அமைச்சர் எல்.முருகனும் துறைமுக கடல் பகுதியில் மீன்வளத்துறை மூலம் நடைபெற்று வரும் துறைமுக சீரமைப்பு பணிகளை பார்வையிட்டனர். அப்போது முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனும் உடனிருந்தார்.

அதன்பின்னர் மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:- சாகர் பரிக்கிரமா யாத்திரையானது கடந்த 04 மாதத்துக்கு முன்பு குஜராத்தில் தொடங்கி பல மாநிலங்களில் உள்ள கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களை சந்தித்து வருகிறோம். தமிழகத்தில் கன்னியாகுமரி, தூத்துக்குடி பகுதிகளுக்கு சென்று மீனவர்களை சந்தித்துவிட்டு, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை பகுதிகளை பார்த்துவிட்டு, திட்டங்களை ஆய்வு செய்தோம்.

இராமேஸ்வரத்தில் துறைமுக பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். இங்குள்ள மீனவர்கள் இராமேஸ்வரம் கடல் பகுதியில் புதிய துறைமுகம் கட்டித்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். இது குறித்து மாநில அரசு ஆய்வு நடத்தி வருவதால் அந்த ஆய்வு முடிந்த பின்னர் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மூலம் மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய பகுதி மீனவர்களை சந்தித்தபோது மீனவர்கள் வைத்த பிரதான கோரிக்கை என்னவென்றால், கடலுக்குள் மீன் பிடிக்க செல்லும்போது மீனவர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் உடனடியாக அவர்களை மீட்டு காப்பாற்ற வசதியாக ஏர் அம்பியூலன்ஸ் வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். இது குறித்து அரசிடம் பேசி ஏர் அம்பியூலன்ஸ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு செல்லும் மீனவர்கள் மற்ற மாநிலங்களில் உள்ள கடல் பகுதிக்கு செல்லும்போது, அந்த துறைமுகப் பகுதிக்குள் சென்று படகுகளை நிறுத்த வசதியாக குறிப்பாக ஒடிசா, குஜராத், மங்களூரு போன்ற கடல் பகுதிகளுக்கு சென்றால் அங்குள்ள துறைமுகத்தில் படகுகளை நிறுத்த வசதியாக தேசிய அடையாள அட்டை வேண்டுமென கேட்டுள்ளனர். இந்த கோரிக்கை குறித்தும் பரிசீலனை செய்யப்படும்.

பிரதமர் மோடி, மீன்வளத்துறைக்கு மட்டும் ரூ.38 ஆயிரத்து 500 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததால் ஏராளமான பணிகள் நடந்துள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் ரூ.1500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய பொருளாதாரத்தில் 8 சதவீதம் மீனவர்களின் பங்கு உள்ளது.

நாட்டை காப்பவர்களாகவும் நாட்டின் எல்லையை காப்பவர்களாகவும் மீனவர்கள் இருந்து வருகின்றனர். மீனவர்கள் முன்னேற்றத்துக்காகவே மத்திய அரசு நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் ஆழ்கடல் மீன்பிடி படகுகளை வழங்கியுள்ளது. அதை மீனவர்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியா - இலங்கை என இருதரப்பிலும் அதிகாரிகள் மட்டத்திலும் அமைச்சர்கள் மட்டத்திலும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை அதிகாரிகள் மட்டத்தில் கூட்டம் நடைபெற்றுள்ளது.

கொரோனா உள்ளிட்ட சூழ்நிலையால் இருநாட்டு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை. அமைச்சர்கள் குழு பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று வெளியுறவுத்துறை மூலம் கேட்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கச்சதீவு விவகாரத்தில் அரசியல் செய்ய விரும்பவில்லை. கச்சதீவை யார் தாரை வார்த்தது என்பது அனைவருக்குமே தெரியும். கச்சதீவை மீட்பது குறித்து உரிய நேரத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

## இரத்தாகும்...

நா.தினுஷா

வெளிநாடுகள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இலங்கை அரசாங்கம் சார்பில் ஒப்பந்தங்களை செய்துகொள்ள வேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சினதும் வெளிநாட்டு அமைச்சினதும் அனுமதியை பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

சீனா, இந்தியா உட்பட்ட வெளிநாடுகள் பல்வேறு நோக்கங்களுக்காக இலங்கையில் தலையீடு செய்வது குறித்து மேற்படிக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஏற்கனவே இலங்கையின் சுகாதார, பல்கலைக்கழக, நீர்ப்பாசன, குடிநீர் போன்ற துறைகள் உட்பட்ட பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள 150இற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் இலங்கை அரசாங்கத்தின் கீழ்வரும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட 100 ஒப்பந்தங்களை சீனா செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. அந்த ஒப்பந்தங்கள் பற்றி அரசாங்கம் முழுமையாக அறியாத அதேசமயம், அவை முறையான அனுமதியும் பெறப்பட்டவை அல்லவென தெரியவந்துள்ளது.

எனவே, நாட்டுக்கு தேவையற்ற வகையில் பிரச்சினைகளை கொண்டுவரும் ஒப்பந்தங்களை இரத்துச் செய்யுமாறு பணித்துள்ள ஜனாதிபதி, இனிவரும் காலங்களில் புதிய ஒப்பந்தங்களை செய்வதாயின் வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் செய்யவேண்டுமென பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி விரைவில் வெளிவரவுள்ளதாக அறியமுடிகின்றது.

## சினோபெக்...

நா.தினுஷா

சினோபெக் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை இந்த மாத இறுதிக்குள் நாடு முழுவதும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலைய வேலைத்திட்டத்தில் முதலீடு செய்யவும் சினோபெக் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதற்கமைய, ஹம்பாந்தோட்டை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கான வேலைத்திட்ட யோசனையை அடுத்த வாரம் வெளியிடவுள்ளதாக சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சினோபெக் நிறுவனத்தின் இலங்கை எரிபொருள் விநியோக நிறுவனம் மற்றும் சினோபெக் சுத்திகரிப்பு நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (03) அமைச்சில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போதே இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேலும் இதன்போது, எரிபொருள் விநியோக செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோக அதிகாரிகளுடனான ஒப்பந்தத்தின் நிலை, சினோபெக் என்ற நாமத்துக்கான செயற்பாடுகள் மற்றும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இம்மாதத்தின் இறுதிக்குள் நாடு முழுவதும் தமது வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேபோன்று, ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் முதலீடு செய்வதற்காக வெளியிட்ட விருப்பத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அதற்கான வேலைத்திட்ட யோசனையை அடுத்த வாரத்தில் முன்வைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

## ராஜகுமாரி...

ராஜகுமாரியென்ற வீட்டுப் பணிப்பெண் அண்மையில் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வைத்து அடித்து கொல்லப்பட்ட சம்பவம் பரவலாக கவனத்தை ஈர்த்த நிகழ்வாக மாறியுள்ளது.

பொலிஸ் காவலில் நடந்த இந்த சட்டவிரோத கொலை விவகாரம் நீதிமன்றத்தின் கவனத்தில் உள்ளது. கொலையுடன் தொடர்புடைய 04 பொலிஸார் இதுவரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம், ராஜகுமாரியின் மரணம் பொலிஸ் தாக்குதலால் ஏற்பட்ட கொலை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த கொலைக்கு காரணமானவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய உத்தரவின்பேரில், ஓகஸ்ட் 28ஆம் திகதி வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் அஜித் குமார என்ற உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார். ஓகஸ்ட் 29ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் செப்டெம்பர் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 01ஆம் திகதி இடைநிறுத்தத்தில் இருந்த இரண்டு சார்ஜன்ட்கள் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவரையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்தனர்.

இந்த கொலையில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகளும் இன்னும் கைது செய்யப்படவில்லை.

மே 11ஆம் திகதி வெலிக்கடை பொலிஸில் இந்தக் கொலை இடம்பெற்றது. பதுளை, நாவலவத்தை, தெமோதர பிரதேசத்தில் வசித்துவந்த ஆர்.ராஜகுமாரி என்ற 42 வயதான மூன்று பிள்ளைகளின் தாயாரே பொலிஸாரால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து கொடூரமான முறையில் அடித்துக் கொன்றுவிட்டு, வீதியில் விழுந்து கிடந்தவரின் சடலம் என பொலிஸார் நாடகமாடி, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கதையை வேறு திசையில் திருப்பி, பொலிஸ் நிலைய கொலையை மறைத்து, வைத்தியசாலையில் உடலை ஒப்படைத்தனர்.

எனினும், பல சிவில் அமைப்புகளின் தொடர் முயற்சியால், பொலிஸார் ஆடிய நாடகம் அம்பலமானது.

தனது வீட்டில் நடந்த திருட்டு சம்பவம் குறித்து, பிரபல திரைப்பட தயாரிப்பாளரும் வர்த்தகருமான சுதர்மா நெத்திகுமார விடுத்த வாய்மொழி அறிவிப்பின்படி, பொலிஸ் புத்தகங்களில் ராஜகுமாரிக்கு எதிராக எந்த புகாரும் எழுதப்படாத நேரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது விசாரணையில் உறுதியாகியுள்ளது.

உயர் அதிகாரிகளிடம் இருந்து பொலிஸாருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்புகளின் பிரகாரம், சுதர்ம நெத்திகுமாரவின் வீட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் திருட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதில் வெலிக்கடை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் பொலிஸாரின் ஆர்வம், சட்டவிரோதமாகி, ஒரு உயிரை பறித்து, இப்பொழுது நீதிமன்ற கூண்டிலேற வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர். திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் சுதர்மா நெத்திகுமாரவின் வீடு வெலிக்கடை பொலிஸ் பிரிவில் ராஜகிரிய குரே வீதியில் உள்ள ரோயல் கார்டனில் அமைந்துள்ளது. அங்கு கணவருடன் வசித்து வருகிறார்.

இந்த வீட்டில் ராஜகுமாரி ஒரு வருடத்துக்கும் மேலாக வேலை பார்த்ததாக கூறப்படுகிறது.

மே 3ஆம் திகதி இந்த வீட்டிலிருந்து வேறு வீட்டுக்கு வேலைக்குச் சென்றுள்ளார். சுதர்மா நெத்திகுமாரவின் கூற்றுப்படி, மார்ச் 26 முதல் மே 03 வரை வீட்டில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரிடம் அவர் முதலில் கூறியபடி, தங்க மோதிரம், வாசனைத்திரவிய போத்தல் மற்றும் ஒரு ஜோடி காலணிகள் திருடப்பட்டன. அவரது முதற்கட்ட தகவலின்படி, அவற்றின் மதிப்பு ஐந்து அல்லது ஆறு இலட்சம் ரூபாதான்.

தனது கணவருடன் வெளியூர் சென்றிருந்தபோது பணிப்பெண் இவற்றை திருடிவிட்டதாக சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்துள்ளார். திருடப்பட்ட மோதிரம், வாசனை திரவிய போத்தல் மற்றும் காலணிகளை கண்டுபிடிக்குமாறு மே 11ஆம் திகதி வெலிக்கடை பொலிஸார் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அப்போது ராஜகுமாரி எங்கே இருக்கிறார் என்பதை முதலில் கண்டுபிடிக்க பொலிஸார் முயற்சித்தனர்.

மலையகத்திலிருந்து பெண்களை வீட்டுப் பணிக்காக அழைத்து வரும், ஒரு தரகர் மூலமே ராஜகுமாரியை, சுதர்மா தனது வீட்டில் வேலைக்கு இணைத்திருந்தார்.

அந்த தரகரின் பெயர் மகேந்திரம் சுரேஷ். சுதர்மாவின் காணாமல்போன மோதிரத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட வெலிக்கடை பொலிஸார், சுதர்மாவின் உதவியுடன் அந்த நபரின் அடையாளத்தைக் கண்டுபிடித்தனர்.

பொலிஸார் சுரேஷின் தொலைபேசிக்கு அழைப்பேற்படுத்தியபோது, அவர் புறக்கோட்டை பஸ் தரிப்பிடத்துக்கு சென்று கொண்டிருந்தார். கொழும்பில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்ய மலையகத்திலிருந்து இளம் யுவதியொருவர் வந்து கொண்டிருந்துள்ளார். அவரை அழைத்து செல்லவே சுரேஷ் அங்கு சென்றிருந்தார்.

அதையறிந்த பொலிஸார், புறக்கோட்டை பஸ் நிலையத்துக்குச் சென்று, பெரும் நடவடிக்கையின் பின்னர் மிகப்பெரிய குற்றவாளியை கைது செய்வதை போல, சுரேஷின் கழுத்தைப் பிடித்தனர்.

அதே சமயம் சுரேஷை இரண்டு மூன்று முறை அடித்து கைவிலங்கிட்டு வெள்ளை காரில் ஏற்றினார்கள்.

திருடப்பட்ட தனது பொருட்களை மீட்டு தரும் நடவடிக்கைக்காக, வெலிக்கடை பொலிஸாருக்கு சுதர்மா கொடுத்திருந்த காரிலேயே சுரேஷ் ஏற்றப்பட்டுள்ளார். கார் சாரதியையும் சுதர்மாவே நியமித்துள்ளார்.

சுரேஷ் தற்போது வழங்கியுள்ள தகவலின்படி, அப்போது அந்த காரில் சாரதியை தவிர இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமே இருந்துள்ளனர்.

கடந்த 1ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களில், இந்த இரண்டு சார்ஜன்ட்களும் அடங்குவர். அவர்கள் சுரேஷை கைது செய்தபோது சிவில் உடையில் இருந்தனர். சீருடையில் யாரும் இல்லை.

ராஜகுமாரி இப்போது எங்கே இருக்கிறார் என்று சுரேஷிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது பொரளை கொட்டா வீதியில் அமைந்துள்ள வீட்டில் ராஜகுமாரி வேலை செய்து கொண்டிருந்தார். மே 3ஆம் திகதி முதல் அங்கு பணிபுரிந்து வருகிறார்.

அவர் அந்த வீட்டில் பணிபுரிய சுரேஷ் உதவிபுரிந்துள்ளார். அதனால், ராஜகுமாரி வேலை செய்யும் இடம் சுரேஷுக்குத் தெரியும்.

சுரேஷ் இந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் அந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார். அப்போது நேரம் சுமார் 12.30 மணி. அங்கு, அந்த வீட்டுக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், அதன் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த அஜித் விஜேசிங்க என்ற தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தரை முதலில் சந்தித்தனர். சாதாரண உடையில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், வெலிக்கடை பொலிஸார் என அறிமுகம் செய்து கொண்டு “குமாரி என்றொருவர் இந்த வீட்டில் வேலை செய்கிறாரா?” என பாதுகாப்பு உத்தியோகத்திடம் கேட்டனர். பாதுகாப்பு உத்தியோகத்தர் “‘ஆம்” என்றார்.

“ஒரு திருட்டு குறித்து அவரிடம் விசாரிக்க வேண்டும். அவரை எங்களிடம் ஒப்படையுங்கள். அவரைக் காவலில் எடுக்கப் போகிறோம்“ என்றனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் தனது முதலாளிகளுக்கு தகவல் அளித்தார். ராஜகுமாரி திருட்டுக்காக தேடப்படுவதாக அவர்கள் கூறியதால் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சுதர்மாவின் வாய்மொழி புகாரின்படி செயற்பட்ட பொலிஸார், ராஜகுமாரியை ஒரு திருடனைப் போல நடத்தினர். ஆனால் அவர் தனது எல்லா வேலைகளையும் உண்மையாகவும் விடாமுயற்சியாகவும் செய்தவர் என்று வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள்.

ஒரு பெண்ணை கைது செய்ய செல்லும் போது பெண் பொலிஸ் உத்தியோகத்தர் இருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டு பொலிஸாரும் சட்டத்தை மீறி ராஜகுமாரியை கைது செய்தனர்.

ராஜகுமாரியை சட்டவிரோதமாக கைது செய்தது மட்டுமின்றி, சுரேஷின் கைகளில் இருந்த விலங்கின் ஒரு பகுதியை அகற்றி, ராஜகுமாரியின் கையில் போட்டனர். அதாவது, ஒரு கைவிலங்கின் ஒரு பக்கத்தில் சுரேஷ் பிணைக்கப்பட்டிருந்தார். மறுமுனையில் ராஜகுமாரி பிணைக்கப்பட்டுள்ளார்.

“சுதர்மா மேடம் வீட்டில் மோதிரம், வாசனைப் போத்தல், செருப்பு ஆகியவற்றைத் திருடியது நீங்கள்தான். இப்போது எங்கே அவற்றை வைத்துள்ளீர்கள்?” என்று ராஜகுமாரியை காரில் இருத்தி, அந்த இரண்டு பொலிஸாரும் விசாரிக்க ஆரம்பித்தனர்.

“ஐயோ சேர், எனக்கு ஒன்றும் தெரியாது. நான் எந்த பொருளையும் திருடவில்லை. வேண்டுமானால், நான் வேலை செய்த ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று தேடுங்கள்.

சுதர்மா மேடம் வீட்டில் வேலை செய்ய முடியாததால் விட்டுவிட்டேன். அந்த கோபத்தில் தான் என் மீது இப்படி ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது'' என்று ராஜகுமாரி தெரிவித்துள்ளார்.

அதற்கு பொலிஸார் செவிசாய்க்கவில்லை. அவர்கள் சுதர்மாவின் குற்றச்சாட்டை மட்டுமே நம்பினர்.

“வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் வைத்து, நானும் ராஜகுமாரியும் பொலிஸாரால் கொடூரமாக தாக்கப்பட்டோம். மொட்டையான, மெலிந்த உயரமான பொலிஸ்காரர், தண்ணீர் குழாயால் ராஜகுமாரியை அடித்ததை நான் பார்த்தேன்” என சுரேஷ் இந்த விஷயங்களை குற்றப் புலனாய்வுத் துறையினர் முன்பும் நீதிமன்றத்திலும் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

சுரேஷின் இந்த சாட்சியத்தாலேயே பொலிஸ் வில்லங்கத்தில் சிக்கியது.

சுரேஷின் தகவல்படி, இருவரையும் பொலிஸார் தாக்கி விசாரிக்கும் போது சுதர்மாவும் அங்கு வந்து சென்றுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், ராஜகுமாரி பணியாற்றிய கொட்டா வீதியில் உள்ள வீட்டுக்கு சுதர்மா சென்றிருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வாளர்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சுதர்மாவின் செல்வாக்கு காரணமாக கொட்டா வீதியிலுள்ள வீட்டின் பாதுகாப்பு கெமராக் காட்சிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதா என்பது குறித்தும் விசாரணையாளர்கள் விசேட கவனம் செலுத்தினர்.

ஏனென்றால், இந்த தொடர் நிகழ்வுகளில், விசாரணையின்போது சுதர்மாவின் நடத்தை குறித்து ஒரு பெரிய சிக்கல் தோன்றியுள்ளது.

“பொலிஸார் எங்களை அடிக்கும்போது சுதர்மா மேடம் அங்கு வந்தார். அவர் வந்து, அடிக்க வேண்டாம், பிரச்சினையை பேசி தீர்க்கும்படி சொன்னார்'' என சுரேஷ்குமார் மேலும் கூறுகிறார்.

இந்த நேரத்தில்தான் ராஜகுமாரி பொலிஸாரின் தாக்குதலைத்தாங்க முடியாமல் தரையில் விழுந்து துடிக்கத் தொடங்கினார்.

இதனால் பீதியடைந்த பொலிஸார், விஷயங்கள் தவறாகிவிட்டன என்பதை அறிந்து, ராஜகுமாரியை இயல்பு நிலைக்கு கொண்டு வர கடுமையாக முயற்சி செய்தார்கள்.

அவர் விரைவில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வீதியில் விழுந்து கிடந்த பெண் என குறிப்பிட்டே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விதிமுறைகளின்படி, வீதியில் கிடக்கும் ஒருவரை பொலிஸார் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதித்தால், அதை தனது சட்டை நோட்டுப் புத்தகத்தில் எழுதி, வைத்தியசாலை பொலிஸாருக்கு தெரிவிக்க வேண்டும். ஆனால் இங்கு அப்படி எதுவும் நடக்கவில்லை. பொலிஸார் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள் என்பது இதுவரை வெளிவரவில்லை.

இதேவேளை, வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சம்பவம் நடந்த நேரத்தில் தான் பாராளுமன்ற பாதுகாப்பு கடமையிலிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். எனினும், நடிகை சுதர்மா யாரிடம் இந்த விவகாரத்தை தெரிவித்தார், பொறுப்பதிகாரிக்கு தெரியாமல் பொலிஸ் நிலையத்தில் ஒரு பெண்ணை தடுத்து வைத்து, அடித்துக் கொல்வது சாத்தியமா? வீதியில் இறந்து கிடந்ததாக நாடகமாடி வைத்தியசாலையில் அனுமதிப்பது சாத்தியமா என குற்றப்புலனாய்வுத்துறை விசாரித்து வருகிறது.

பணிப்பெண் உயிரிழந்த தகவல் பரவியதும் வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஊடகங்கள் வினவியபோது, பொலிஸார் தாக்கி அவ்வாறான மரணம் நிகழவில்லையென கூறினார்.

இச்சம்பவத்துக்குப் பிறகு, பொலிஸ் விசாரணையில் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் ராஜகுமாரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் திடீரென உயிரிழந்ததாக பொலிஸ் தரப்பில் இருந்து அதிகாரபூர்வ தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் தாக்கப்பட்டதாக பொலிஸார் எங்கும் கூறவில்லை. அதையெல்லாம் மறைக்க வெலிக்கடை பொலிஸார் கடுமையாக முயன்றனர். இதற்கு சில உயரதிகாரிகளின் ஆசியும் கிடைத்தது.

ராஜகுமாரி அடித்துக் கொல்லப்பட்டதாக தகவல் பரவியதையடுத்து, பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன, இந்த சம்பவத்தை ஆராய்ந்து அறிக்கையளிக்க பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்தார்.

ராஜகுமாரியை கைது செய்தது முதல் அடித்துக் கொலை செய்வது வரை பல விவரங்களை ஆதாரத்துடன் வெளிக்கொண்டு வந்த சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர், அதையெல்லாம் உள்ளடக்கிய அறிக்கையை பொலிஸ்மா அதிபரிடம் கொடுக்கிறார்கள். இதன்படி, வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்படவுள்ளதுடன், ராஜகுமாரி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சப்-இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்படவுள்ளதுடன், வெலிக்கடையில் இருந்து ஒரு கான்ஸ்டபிள் மற்றும் இரண்டு பெண் கான்ஸ்டபிள்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கிடையில், ஜூன் 10 அன்று சுதர்மா நெத்திகுமார தனது வீட்டில் நடந்ததாகக் கூறப்படும் திருட்டு குறித்து பொலிஸார் விரிவான புகார் அளித்தனர். கடந்த மார்ச் 26ஆம் திகதி முதல் மே 3ஆம் திகதிக்குள் வீட்டில் திருட்டு நடந்ததாக பொலிஸில் புகார் அளித்துள்ளார். தனது தங்கப் பொருட்கள், வாசனை திரவியங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும், திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி 1,914,000 ரூபா எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த பொருட்களை ராஜகுமாரி உண்மையில் திருடினாரா? அல்லது வேறு ஏதாவது நடந்ததா என்பது தெரியவில்லை.

ராஜகுமாரியை கொடூரமாக தாக்கி கொலை செய்ய பயன்படுத்திய ரப்பர் குழாயையும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் ஒரு மூலையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கண்டுபிடித்துள்ளனர். ரப்பர் குழாய், ராஜகுமாரியினது என சந்தேகிக்கப்படும் சில முடிகள் மற்றும் இரத்த மாதிரி ஆகியவை தற்போது மரண விசாரணை அதிகாரியின் பாதுகாப்பில் உள்ளன. அந்த ரப்பர் குழாய் பகுதியில் சிக்கியிருந்த முடி மற்றும் இரத்த மாதிரிகள் ராஜகுமாரியினுடையதா என்பது டி.என்.ஏ பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் தெரியவரும்.

## 77 வகையான...

இந்தியக் கடன் திட்டங்களின்கீழ் பெறப்பட்ட 378 வகையான மருந்துகள் இதுவரை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார். கடந்த வருடம் உலக வங்கியின் உதவியுடன் 23 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 46.7 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## உணவு விஷமானதால்...

அனுமதிக்கப்பட்டார். விருந்தில் குறிப்பிட்ட வகை உணவை சாப்பிட்டுவிட்டு, உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் அந்த உணவில் நஞ்சு கலந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், அவரது உடல்நிலை மோசமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற விருந்தொன்றில் வைத்து அவர் இந்த உணவை உட்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், அமைச்சர் உட்கொண்ட உணவை மேலதிக பரிசோதனைக்கு அனுப்பும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## வெளிநாட்டு...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது மாநாடு ‘ஒன்றிணைவோம் மாற்றத்துக்கு தயாராகுவோம்’ என்ற தொனிப்பொருளில், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள மொனாச் இம்பிரியல் ஹோட்டலில் நேற்று (03) இடம்பெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது நாட்டிலுள்ள பிரஜைகள் ஒவ்வொருவரும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ஒருமைப் பாட்டுடன் பேசும் நிலை உருவாகவில்லை. வேறு வேறு விடயங்கள் பற்றி பேசுகிறோம். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்றும் எம்மை நாமே வகைப்படுத்திக்கொள்கிறோம். மறுபுறம், பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் என்று கூறிக்கொள்கிறோம்.

நாட்டில் மொழி, சமயம், கலாசாரம் என்பன மிகவும் முக்கியமானவையாகும். ஆனால், அவற்றினூடாக நாடு பிளவுபடுகின்றது என்றால் அதனூடாக நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. இந்தியா அண்மையில் சந்திரயான் - 3ஐ நிலவுக்கு அனுப்பியது. ஒருபுறம் அந்த நாட்டில் வறுமை இருக்கிறது என்பதும் எமக்குத் தெரியும். இருந்தபோதும், அங்கும் பல்வேறு மொழிகளை பேசும் பல்வேறு சமயங்களை பின்பற்றும் மக்கள் இருக்கிறார்கள்.

ஆனாலும், இந்தியர்கள் என்ற அடிப்படையில் சகோதரத்துவத்துடன் அந்த நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். எனவே, பிரதானமாக எமது நாட்டை கட்டிமுப் பும்போது எமக்கென சிறந்த வெளிநாட்டு கொள்கையொன்று இருக்கவேண்டியது அவசியமாகும். இன்று எம்மிடம் வெளிநாட்டு தொடர்புகள் இருக்கின்றனவே தவிர சரியான வெளிநாட்டு கொள்கையென்றவொன்று இல்லை. வெளிநாட்டு உறவுகளும் அவசியமாகும். அந்த உறவுகளினூடாக எமக்கென தனியான வெளிநாட்டு கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

எந்த சமயத்தவர்களாக இருந்தாலும் மத்திய கொள்கையென்றவொன்று இருக்கவேண்டும். ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சார்பாக செயற்படாமல் மத்தியஸ்தமாக இருந்து பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

# கொழும்பில் மலேஷியாவின் சுதந்திரதின நிகழ்வு





அஷ்ரப் ஏ. சமத்

மலேஷியாவின் 66ஆவது சுதந்திரதின நிகழ்வு இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகராலயத்தினால் கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் கடந்த 31ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. பதில் உயர்ஸ்தானிகர் சார்ஜி.டி.அபயார்ஸ் மொஹமட் டுமிங் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள், கிழக்கு மற்றும் ஊவா மாகாண ஆளுநர்கள், படைத்தளபதிகள் உட்பட் மலேஷியா-இலங்கை நட்புறவுச் சங்க உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# மட்டு. போதனா வைத்தியசாலைக்கு இருதய சிகிச்சை இயந்திரம்

## உயரதிகாரிகள் உறுதியளித்துள்ளதாக கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

வாழைச்சேனை செய்தியாளர்

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு இருதய சிகிச்சை (அஞ்சி யோகிராம்) இயந்திரத்தை வழங்க சுகாதார அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் உத்தரவாதமளித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருந்த இருதய சிகிச்சைப் பிரிவுக்கான (அஞ்சியோகிராம்) இயந்திரம் மட்டக்களப்பு போதானா வைத்தியசாலைக்கு கிடைக்கவுள்ளது.

அதாவது, 2021ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கென்று இந்த இருதய சிகிச்சைப் பிரிவுக்கான இயந்திரம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் திடீரென அது களுத்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்து பேசியிருந்தும், பாராளுமன்றத்திலும் வெளியிலும் எத்தனையோ பிரயத்தனங்களை மேற்கொண்டும் பலனில்லாமல் அந்த இயந்திரம் களுத்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில், இருதய சிகிச்சை (அஞ்சியோகிராம்) இயந்திரமொன்று சுகாதார அமைச்சுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அறியக் கிடைத்ததையிட்டு சுகாதார அமைச்சின் செயலாளர் தொலைபேசியில் கலந்துரையாடினேன். அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அந்த இயந்திரம் தேவை என்பதை உணர்ந்திருக்கின்றார். அதேபோன்று சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவுடனும் உரையாடினேன். அவரும் இந்தத் தேவையை உணர்ந்து கொண்டு அமைச்சரும் செயலாளரும் மட்டக்களப்புக்கு முன்னுரிமை கொடுத்து அந்த இயந்திரத்தை மட்டக்களப்புக்குத் தருவதாகத் தொலைபேசி மூலம் உத்தரவாதமளித்துள்ளார்கள்.



இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடனும் தொலைபேசியில் உரையாடியதற்கமைவாக தானும் இவ்விடயத்துக்கு நூறு வீத ஒத்துழைப்பைத் தருவதாகவும் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி அதன் பிரதியை வாட்ஸ்அப் மூலமாகத் தனக்கும் அனுப்புமாறும் தெரிவித்திருக்கின்றார்.

அந்த வகையில் மேற்சொன்ன மூவரும் அந்த இருதய சிகிச்சை இயந்திரத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே மாவட்டத்தின் ஏனைய சக பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தை அரசியல் ரீதியாகப் பாராது மேற்படி இயந்திரத்தை இங்கு கொண்டு வருவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# முச்சக்கரவண்டி விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, வெருகல், பூநகர் பகுதியில் முச்சக்கரவண்டியொன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (03) அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் வெருகல் முருகன் ஆலயத்துக்குச் சென்று வீடு திரும்பும் போதே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராசா ஜெயச்சந்திரன் (வயது 41) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேருவளையில் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

பேருவளை நிருபர்

பேருவளை அப்ரார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்துள்ள குறைந்த வருமானம் பெறும் பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 09ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 04 மணிக்கு பேருவளை, மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மண்டபத்தில் நடைபெறும்.

அப்ரார் கல்வி நிலைய தலைவர் நிஸாம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கைக்கான துருக்கி நாட்டின் தூதுவர், இலங்கைக்கான பலஸ்தீன நாட்டின் தூதுவர் கலாநிதி ஹூகைர் ஹம்தல்லாஹ் ஸைட், கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்லியா முனாஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பேருவளை, மருதானை, மாளிகாசேனை மற்றும் மஹகொட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் சுமார் 60 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** பணம் ஏதோ வழியில் வந்து கொண்டிருக்கும். தெளிந்த மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**ரிஷபம்** பயணங்களால் மன மகிழ்ச்சி உற்சாகம். தாய்வழி இலாபங்கள் உண்டு.

**மிதுனம்** சமயோகித புத்தியால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள். அவசிய செலவுகள் இருக்கும்.

**கடகம்** திடீர் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. வார்த்தைகளால் விளையாடுவீர்கள்.

**சிம்மம்** மனதை அலைய விடாதீர்கள். சிந்தனையில் மூழ்கியிருப்பீர்கள் அதனால் ஞாபக மறதி ஏற்படலாம்.

**கன்னி** வீண் டென்ஷன் வேண்டாம், உங்கள் பணம், பொருட்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**துலாம்** தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் பண வரவு உண்டு. உடல் நிலையில் அக்கறை காட்டுங்கள்.

**தனுசு** எதிர்பாராத சுபச் செய்தியால் மகிழ்ச்சி. ஆலய தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**மகரம்** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம் செய்ய வேண்டாம்.

**கும்பம்** காதல் பயணங்கள், சுற்றுலாக்கள் மூலம் மகிழ்ச்சி உண்டு, பெண்களால் இலாபம் உண்டு.

**மீனம்** உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள். தேவையற்ற விடயங்களால் எரிச்சல் அடைவீர்கள்.

**திதி:** பஞ்சமி பி.ப.4.42 வரை பின் சஷ்டி
**நட்சத்திரம்:** அஸ்வினி மு.ப.9.26 வரை பின் பரணி
**யோகம்:** மரண யோகம் முழுவதும்
**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்ல நேரம்:** பி.ப. 12.03 – 12.33 மணிவரை
**ராகுகாலம்:** 7.33– 9.03 மணிவரை
**எமகண்டம் :** 10.33– 12.03 மணிவரை
**குளிகை:** 1.33– 3.03 மணிவரை
**சந்திராஷ்டமம்:** கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** ஆயிலியம், கேட்டை, ரேவதிஅஸ்வினி,மகம்,மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ---------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# கச்சதீவை யாருக்கு வழங்குவது; இரு நாடுகளும் ஆராய வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிப்பு

பு.கஜிந்தன்

கச்சதீவை இலங்கையே வைத்துக் கொள்வதா அல்லது இந்தியாவுக்கே வழங்குவதா என, குறித்த இரு நாடுகளும் ஆராய வேண்டும் என தமிழீழ விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் இல்லத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் "தமிழ்நாட்டு மீன்வள அமைச்சர் கச்சதீவை மீட்கவேண்டும் என கூறியுள்ளார். இது குறித்து தங்களது நிலைப்பாடு என்ன?" என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவை ஆரம்ப காலங்களில் இந்தியா வைத்திருந்ததாகவும் பின்னர் இலங்கைக்கு வழங்கப்பட்டதாகவும் பல உண்மைகளும் கதைகளும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கச்சதீவை ஒவ்வொரு தடவையும் இலங்கை இந்தியாவுக்கு கொடுப்பதும் இந்தியா இலங்கைக்கு வழங்குவதுமான செயற்பாடுகள் இல்லாமல் இது விடயத்தில் நிரந்தரமான முடிவு எட்டப்பட வேண்டும் என்பது தான் எமது நோக்கம் எனவும் தெரிவித்தார்.




கிழக்கிலங்கையின் மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம் "வீசு தென்றல்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் அவருக்கான விருதை வழங்கினார்.

படங்கள்: ஏருவில் செய்தியாளர்

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆணைக்குழு முன் சாட்சியம்




வடகிழக்கு யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர்களின் உறவுகளுக்கான விசாரணை தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (03)இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற விசாரணையில் தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை பட்டினமும் சூழலும் மற்றும் மொரவெவ ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளைச் சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர். இதன்போது 22க்கும் மேற்பட்ட காணாமல் போனவர்களின் உறவினர்கள் பங்கேற்று சாட்சியமளித்தனர்.





**கொட்டாஞ்சேனை யாச்சகயா அமைப்பின் ஏற்பாட்டில் கொட்டாஞ்சேனை பொலிஸார், கரையோர பொலிஸார், புனித ஜோன் அம்பியூலன்ஸ் மற்றும் மனித நேய மனித உரிமைகள் அமைப்பு ஆகியன இணைந்து கொட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட யாசகர்களுக்கு புத்தாடை மற்றும் உணவுகளை வழங்கியது. இது தொடர்பான நிகழ்வு காளிமுத்து விழா மண்டபத்தில் நடைபெற்றது.**

# சேற்றினுள் புதையுண்டுள்ள யானையை மீட்க முயற்சி



வவுனியா, மாமடு குளத்தின் நீரேந்துப் பகுதியில் சேற்றினுள் புதையுண்டுள்ள யானையை மீட்கும் பணியில் வனஜீவராசிகள் திணைக்களம் நேற்று ஈடுபட்டது.

குறித்த சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வவுனியா, மாமடு குளத்தின் நீரேந்துப் பகுதிக்கு மாடு மேய்ப்பதற்காக சென்ற ஒருவர், மேற்குறித்த நீரேந்துப் பகுதியில் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்கு போராடுவதை அவதானித்துள்ளார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து யானையை மீட்கும் பணியை வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸார் மற்றும் கிராம மக்கள் இணைந்து முன்னெடுத்தனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 04ஆம் திகதி, திங்கட்கிழமை

# சிங்கப்பூர் சொல்லும் செய்தி!

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் சிங்கப்பூர் ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி ஹலிமாவின் 6 ஆண்டு பதவிக் காலம் வரும் 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் (66), இங் கொக் சொங் (76), டான் கின் லியான் (75) ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். மூன்று வேட்பாளர்களும் மக்களிடையே தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

சுமார் 27 லட்சம் சிங்கப்பூர் மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். மாலை 5 மணிக்குள் 85 சதவீத வாக்குகள் பதிவாகின. சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் முதல்முறையாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் 10 நகரங்களில் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நாடுகளிலும் நேற்று விறுவிறுப்பாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

தேர்தல் முடிவின்படி தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் 70 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட இங் கொக் சொங் 16 சதவீத வாக்குகளும், டான் கின் லியான் 14 சதவீத வாக்குகளும் பெற்றனர். இதன்மூலம் சிங்கப்பூரின் அடுத்த ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்னம் பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இந்த அளவுக்கு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருப்பது தமக்கே வியப்பளிப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்த சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதியாகப் பதவியேற்க இருக்கும் தர்மன் சண்முகரத்னம், தம்மீது நம்பிக்கை வைத்து மக்கள் ஐக்கியமாக வாக்களித்துள்ளனர். அந்த நம்பிக்கை பொய்க்காமல் மேலும் திறம்படச் செயலாற்ற வேண்டும் என்பதை முக்கியமாகக் கருதுவதாகக் கூறினார்.

தர்மன் வெற்றிபெற்றிருப்பது தொடர்பில் சமூக ஊடக வலைப்பரப்பில் வாழ்த்துகள் மலைபோல் குவிந்து வருகின்றன.இலங்கையில் தமிழர்கள் பலரும் அவர் பூர்வீகம் ஈழத் தமிழர் என்பதாக அவரைப் புகழ்கின்றனர்.ஈழத்தமிழர் கஷ்டப்பட்ட போதெல்லாம் தர்மன் எங்கே இருந்தார்? ஏன் அமைதியாக இருந்தார்?என்ற விமர்சனங்களுக்கு அப்பால் தமிழர் என்ற ரீதியில் அவரை வாழ்த்துவது தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டிருப்போரின் நோக்காக இருக்கிறது.

சிங்கப்பூர் உருவாவதற்கு ஒரு பகுதி உழைப்பு அதுவும் குறிப்பாக,தமிழர்களின் உழைப்பு உள்ளது என்பதை சிங்கப்பூரின் தந்தை என்று சொல்லப்படுகின்ற லீ க்வான் யூ (Lee Kuan Yew as its first Prime Minister) தமிழர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து, தான் பிரதமர் ஆனவுடன், தமிழையும் ஆட்சி மொழியில் ஒன்றாக ஆக்கினார். 1959ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பிரிட்டன் முழு அதிகாரத்தையும் சிங்கப்பூரிடம் ஒப்படைத்தது.

நன்றி மறவாத சிங்கப்பூர் பிரதமர் தமிழையும் ஆட்சி மொழியில் ஒன்றாக ஆக்கினார். நான்கு ஆட்சி மொழி அங்கு உள்ளது. அதில் தமிழும் ஒன்றென்பது தமிழர்களுக்குப் பெருமை. இன்று சிங்கப்பூர் உலக வர்த்தக மையத்தில் ஒரு முதன்மையான நாடாகத் திகழ்கின்றது. இதில், தழிழர்களின் உழைப்பும் இருக்கிறதை உணரும் போது, தமிழர்களுக்கு மேலும் பெருமை. ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர் ஒருவர் சிங்கப்பூரில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளமை இனவாத இலங்கைக்கு மிகப்பெரிய பாடம் ஒன்றை சொல்லித்தருகிறது. ஆண்டாண்டுகாலம் மாடாய் உழைத்த தமிழர்கள், தமிழ் பேசும் மக்கள் இங்கே மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதால் இலங்கை எப்போதுமே இப்படித்தான் இருக்கப்போகிறது என்ற செய்தியை அது சொல்லி நிற்கிறது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையை கட்டியெழுப்பும் பணியில் தமிழர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்; நாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டார்கள். இனக்கலவரங்கள், வன்முறைகளைச் சந்தித்தும் தேசத்தின்மீது பற்றுகொண்ட தமிழர்கள், முஸ்லிம்கள் காலத்திற்கு காலம் பேரினவாத சக்திகளால் ஒடுக்கப்பட்டனர்.

சாதாரண அமைச்சர் பதவியைத் தவிர வேறு உயர் பதவி ஒன்றுக்கு அவர்களால் செல்லமுடியாத நிலைமை. நாட்டின் அரசியலமைப்பும் மகாவம்ச மனநிலையும் ஆட்சிக்கு வந்தவர்களின் மனங்களில் விஷத்தை விதைத்தால் எப்போதோ சிங்கப்பூராகியிருக்கவேண்டிய இலங்கை, இப்போது சிங்கப்பூரைப் பார்த்து குமுறிக்கொண்டிருக்கிறது. அதன் சகவாழ்வை எண்ணிக்கூடப் பார்க்க மறுக்கிறது.பேரினவாதம் இலங்கைத் தீவில் ஒழிக்கப்படும் வரை இலங்கை இலங்கையாகவாவது இருக்குமா என்பது ஐயமே..!



# சிங்கப்பூர் ஜனாதிபதியான தமிழ் வம்சாவளி: தர்மன் சண்முகரத்னம் கடந்து வந்த பாதை

சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபல பொருளாதார நிபுணர் தர்மன் சண்முகரத்தினம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு வளமான நாட்டிற்கு தலைமை தாங்கும் மூன்றாவது இந்திய வம்சாவளி நபர் ஆனார்.

2.7 மில்லியனுக்கும் அதிகமான சிங்கப்பூர் வாக்காளர்களில், ஏறக்குறைய ஒன்பது சதவீதம் சிங்கப்பூர் இந்திய சமூகம் உள்ளது.தமிழ் மூதாதையர்களுக்குப் பிறந்த தர்மன், 50 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைக் கண்ட நாட்டின் மிகவும் தகுதியான குடிமக்களில் ஒருவர்.



"பல தசாப்தங்களாக உங்களுக்கு பல வழிகளில் சேவை செய்ய நான் பாக்கியம் பெற்றுள்ளேன். அடித்தளத்தில் பணியாற்றுவதுடன், நியாயமான மற்றும் உள்ளடக்கிய சமுதாயத்திற்கான தேசியக் கொள்கைகளை வடிவமைத்து, சர்வதேச அளவில் சிங்கப்பூர்க் கொடியை உயர்வாகப் பறக்க விடுவேன்" - என்று 66 வயதான தர்மன் சண்முகரத்தினம் கூறினார்.

இவர் பொருளாதார நிபுணர் மட்டுமல்ல, ஒரு நல்ல விளையாட்டு வீரர் மற்றும் கவிஞர் ஆவார்.

சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டு நிறுவனத்தில் (GIC) முன்னாள் தலைமை முதலீட்டு அதிகாரியான Ng Kok Song மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழிற்சங்க அடிப்படையிலான காப்பீட்டுக் குழுவான NTUC இன்கமின் முன்னாள் தலைவரான Tan Kin Lian ஆகியோரை 70 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் தர்மன் தோற்கடித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ஹலிமா யாக்கோப்பின் ஆறு ஆண்டு பதவிக்காலம் செப்டெம்பர் 13 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

சிங்கப்பூரில் பெப்ரவரி 25, 1957 இல் பிறந்த தர்மன், 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூரர் ஆவார்.இவரது பூர்வீகம் இலங்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூரில் ''நோயியலின் தந்தை" என்று அழைக்கப்படும் மருத்துவ விஞ்ஞானி எமரிட்டஸ் பேராசிரியர் கே. சண்முகரத்தினம், சிங்கப்பூரில் புற்றுநோய் பதிவேட்டை நிறுவியவர் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் நோயியல் தொடர்பான பல சர்வதேச அமைப்புகளுக்கு தலைமை தாங்கியவர். இவரின் மூன்று பிள்ளைகளில் ஒருவர் தான் தர்மன்.

தர்மன், சீன-ஜப்பானிய வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூர் வழக்கறிஞரான ஜேன் யூமிகோ இட்டோகியை மணந்தார், அவர் சிங்கப்பூரில் சமூக நிறுவனங்களிலும் இலாப நோக்கற்ற கலைத் துறையிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த தம்பதிக்கு ஒரு மகள் மற்றும் மூன்று மகன்கள் உள்ளனர்.

ஆங்கிலோ-சீனப் பள்ளியில் பயின்ற தர்மன் லண்டன் ஸ்கூல் ஒவ் எக்கோனமிக்ஸ் (LSE) இல் பொருளாதாரத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். (LSE பின்னர் 2011 இல் அவருக்கு கௌரவ பெலோஷிப்பை வழங்கியது). பின்னர் அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள வொல்ப்சன் கல்லூரிக்குச் சென்றார். அங்கு பொருளாதாரத்தில் முதுகலை தத்துவப் பட்டம் பெற்றார்.

பின்னர் அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஹார்வர்ட் கென்னடி பாடசாலையில் மாணவரானார்.அங்கு அவர் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் (MPA) முடித்தார். மற்றும்




Lucius N. Littauer Fellows விருதைப் பெற்றவர். (கல்வித் திறன் மற்றும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் MPA மாணவர்களுக்கு வழங்கப்பட்டது).

தொழில் ரீதியாக ஒரு பொருளாதார நிபுணரான தர்மன், தனது பணி வாழ்க்கையை முக்கியமாக பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுடன் தொடர்புடைய பொது சேவையில் செலவிட்டார். அவர் பல்வேறு உயர்மட்ட சர்வதேச கவுன்சில்கள் மற்றும் சபைகளுக்கு தலைமை தாங்கினார்.

2011 மற்றும் 2019 க்கு இடையில் சிங்கப்பூரின் துணைப் பிரதமராகவும், 2019 மற்றும் 2023 க்கு இடையில் மூத்த அமைச்சராகவும் தர்மன் பணியாற்றியுள்ளார்.ஜூன் 2023 இல் தர்மன் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக இருக்க விரும்புவதாக அறிவித்தார்.

ஜனாதிபதி பதவி ஒரு கட்சி சார்பற்ற அலுவலகம் என்பதால், அரசாங்கத்தின் அனைத்து பதவிகளிலிருந்தும் மற்றும் சிங்கப்பூரின் ஆளும் மக்கள் செயல் கட்சியின் (PAP) உறுப்பினர் பதவியிலிருந்தும் ஜூலை 2023 இல் இராஜினாமா செய்தார்.

1970 களில் இங்கிலாந்தில் படிக்கும் போது ஒரு மாணவர் செயற்பாட்டாளரான, தர்மன் முதலில் சோஷலிச நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்.பொருளாதாரம் குறித்த அவரது கருத்துகள் அவரது பணி வாழ்க்கையின் போது உருவாகின.

1992 இல் MAS இன் பொருளாதாரத் துறையின் இயக்குநராகப் பணியாற்றியபோது, சிங்கப்பூரின் 1992 இரண்டாம் காலாண்டு ஃபிளாஷ் GDP வளர்ச்சிக் கணிப்புகளை உள்ளூர் செய்தித்தாளில் வெளியிட்டமை தொடர்பான வழக்கில், அதிகாரபூர்வ இரகசியச் சட்டத்தின் (OSA) கீழ் தர்மன் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் அவருக்கு 1,500 சிங்கப்பூர் டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

ஆனால், அதையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவர் பொதுத் துறைக்கு சேவையாற்றினார் மற்றும் அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சர் பதவிகளில் பணியாற்றினார்.

பின்னர் ஆளும் மக்கள் செயல் கட்சியில் (PAP) சேர்ந்து 2001 இல் அரசியல்வாதியாக அறிமுகமான அவர், 2003 இல் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். 2008 வரை இந்தப் பொறுப்பில் பணியாற்றினார்.

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் 2007 மற்றும் 2015 க்கு இடையில் நிதி அமைச்சராகவும் 2011 மற்றும் 2012 க்கு இடையில் மனிதவள அமைச்சராகவும் 2015 மற்றும் 2023 க்கு இடையில் சமூக கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் இருந்துள்ளார்.

இது தவிர, சிங்கப்பூரின் நாணய ஆணையத்தின் தலைவர், 2011 மற்றும் 2023 க்கு இடையில் மத்திய வங்கி மற்றும் 2019 மற்றும் 2023 க்கு இடையில் சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டுக் கழகத்தின் (GIC) துணைத் தலைவராக அவர் பணியாற்றினார்.

தர்மன் 2001 மற்றும் 2023 க்கு இடையில் ஜூரோங் GRC இன் தாமன் ஜூரோங் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராக (MP) இருந்தார். 2006, 2011, 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களில் நான்கு முறை மீண்டும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொது மற்றும் தனியார் துறைகள் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த பொருளாதார மற்றும் நிதித் தலைவர்களின் உலகளாவிய கவுன்சிலான முப்பது குழுவின் அறங்காவலர் குழுவின் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

தர்மன் உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) அறங்காவலர் குழுவில் உறுப்பினராகவும், 2024 ஆம் ஆண்டு ஐ.நா. உச்சிமாநாட்டில் பயனுள்ள பரிந்துரைகளை வழங்கும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

2011 முதல் 2014 வரை அவர் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கொள்கை ஆலோசனைக் குழுவான சர்வதேச நாணய மற்றும் நிதிக் குழுவின் (IMFC) தலைவராக இருந்து அதன் முதல் ஆசியத் தலைவராக ஆனார்.

2019 முதல் 2022 வரை ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) மனித மேம்பாட்டு அறிக்கையின் (HDR) ஆலோசனைக் குழுவின் இணைத் தலைவராக இருந்தார்.

தனது இளமைப் பருவத்தில் தர்மன் ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு வீரர். கல்வியின் ஒரு வடிவமாக விளையாட்டைப் பற்றி அவர் பேசினார்.

குழந்தைகள் அணியாக இருப்பதன் மதிப்பைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம் ஒழுக்கத்தை கற்றுக்கொள்கிறார்கள். நிபுணத்துவத்தை வளர்க்க இது சிறந்த வழி. மேலும், போட்டியில் விழுந்து அல்லது தோல்வியடைந்து தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் திறனைப் பெறுகிறார்கள் என்று அவர் கூறினார்.

அவர் 2002 முதல் சைனீஸ் கலிகிராஃபியும் ஆர்வத்துடன் கற்று வருகிறார்.

தர்மன், அரசு சாரா நிறுவனங்களிலும் பணியாற்றியுள்ளார் . சிங்கப்பூரில் உள்ள இந்திய சமூகத்தின் கல்வி செயல்திறன் மற்றும் அபிலாஷைகளை உயர்த்த முயற்சிக்கும் சிங்கப்பூர் - இந்திய மேம்பாட்டு சங்கத்தின் (SINDA) அறங்காவலர் குழுவின் தலைவராகவும் உள்ளார்.

COVID-19 தொற்றுநோயைத் தொடர்ந்து சிங்கப்பூரர்களுக்கான திறன்கள் மற்றும் வேலைகளை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட ஓங் டெங் சியோங் லேபர் லீடர்ஷிப் இன்ஸ்டிடியூட் மற்றும் தேசிய வேலை வாய்ப்பு கவுன்ஸிலுக்கும் அவர் தலைமை தாங்கினார்.

சர்வதேச மேடைகளில் பல விருதுகளையும் - பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூர் அரசியல்வாதியான எஸ் .ஆர். நாதன் என்று அழைக்கப்படும் செல்லப்பன் ராமநாதன் 2009 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூர் ஜனாதிபதியாகப் பணியாற்றினார், அதே சமயம் தேவன் நாயர் என்று அழைக்கப்படும் மலையாளி வம்சாவளியைச் சேர்ந்த செங்கரா தேவன் நாயர் 1981 முதல் 85 வரை சிங்கப்பூரின் மூன்றாவது ஜனாதிபதியாகப் பணியாற்றினார்.

## இன்றைய நாளில்...

- 1978 – அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1985 – கரிமத்தின் முதலாவது புலரின் மூலக்கூறு பக்மின்ஸ்டர்ஃபுலரின் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1998 – இஸ்ட்டன்போர்ட் பல்கலைக்கழகத்தின் லரி பேஜ், சேர்ஜி பிரின் ஆகிய மாணவர்கள் கூகுள் நிறுவனத்தை ஆரம்பித்தனர்.
- 2006 – இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கி.மு. 1ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் புதைகுழிக் குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
- 2010 – நியூசிலாந்தின் தெற்குத் தீவில் இடம்பெற்ற 7.1 அளவு நிலநடுக்கத்தில் பெரும் சேதம் ஏற்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

சிங்கப்பூரில் தமிழர் ஒரு ஆள் ஜனாதிபதியாகிட்டாராம்.. இப்படியான செயல்களாலதான் அது சிங்கப்பூர் ஆனது பாருங்கோ...



# மன்னாரில் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி





மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு தலைமத்துவப் பயிற்சி வழங்கும் முகமாக சமூக மட்ட பிரச்சினைகளுக்கு எதிராக முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) அகில இலங்கை முஸ்லிம் லீக் முன்னணிகளின் சம்மேளனத்தின் தேசிய தலைவர் ஜனாப் லுக்மான் சஹாப்தீன் தலைமையில் மன்னார் ஆஹாஸ் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது

நாடளாவிய ரீதியில் அதிகரித்துவரும் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது, சமூக ஒத்திசைவை வலுப்படுத்தல், மத நல்லிணக்க முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய இளைஞர் தலைவர்களை உருவாக்குதல் தொடர்பாக செயலமர்வு ஏற்பாடுசெய்யப்பட்டு இடம்பெற்றது

குறித்த நிகழ்வுக்கு விசேட அழைப்பின்பேரில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், இலங்கைகான பலஸ்தீன உதவி உயர்ஸ்தானிகர் ஹிஷாம் அபுதாஹா, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் மஹீஸ், பாராளுமன்ற சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் மொஹமட் அஜுவடீன், விரிவுரையாளர் இர்ஹாம் சராபி உட்பட பலரும் கலந்துகொண்டனர்

மன்னார் மாவட்டத்திலுள்ள 150இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் குறித்த குறித்த பயிற்சி நிகழ்வில் முழுமையாக கலந்துகொண்ட நிலையில் பங்குபற்றிய இளைஞர், யுவதிகளுக்கான அடுத்தகட்ட பயிற்சி ஒக்டோபர் மாதம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கம் அயல்நாட்டு உறவைப் பாதிக்கும்

## த. வி. கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

பு.கஜிந்தன்



சீனாவை விட அளவிலும் சனத்தொகையிலும் மிகச் சிறிய நாடாகக் கணப்படுகின்ற இலங்கை மீது சீனா வைத்திருக்கும் ஆதிக்கம் அயல்நாடான இந்தியாவின் உறவைப் பாதிக்கும் - என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியை காரணமாக வைத்து உதவி என்ற போர்வையில் கடன்களை சீனா வழங்கி இலங்கையை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது.

சீனாவின் குறித்த ஆதிக்கமானது அயல்நாடான இந்தியாவை சீண்டிப் பார்க்கும் ஒரு செயல்பாடாகக் காணப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொருளாதார, கலாசார மற்றும் சமூகரீதியான நீண்ட வரலாற்றைக் கொண்ட தொடர்புகள் இருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் கடந்து சீனா இலங்கை மீது பொருளாதார ரீதியான ஆக்கிரமிப்பைச் செலுத்துவது இலங்கையையும் இந்தியாவையும் பகையாளிகளாக பார்ப்பதற்கு செய்யும் ஏற்பாடாகும்.

இதன் தொடர்ச்சியாக சீனாவிலிருந்து இம்மாத இறுதிப் பகுதியில் ஆய்வுக் கப்பலொன்று அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகவே, இலங்கை மீது சீனா கொண்டுள்ள ஆதிக்கத்தை மேலும் தக்கவைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் நிலையில் இத்தகைய செயல்பாடு இலங்கை, இந்தியா உறவுகளை சீண்டிப் பார்ப்பதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# 5000 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முயற்சிக்கின்றனர்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர் விஜயரத்தினசிங்கம் தர்ஷன் தெரிவிப்பு



சுமார் 5000 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான முயற்சியில் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வைத்தியர் விஜயரத்தினசிங்கம் தர்ஷன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருக்கும் வைத்தியர்களுள் 95 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் வைத்தியத்துறை சம்பந்தப்பட்ட பெரும்பான்மையை நாங்கள் பிரதிபலிக்கின்றோம். இவ்வாறான ஒரு தொழிற்சங்கமாக இருக்கின்றபடியால் நாங்கள் சுகாதாரத்துறை சம்பந்தமான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதும் அதில் ஏற்படுகின்ற சாதக பாதக நிலைமைகள் பற்றி ஆராய்வதிலும் அக்கறை செலுத்தி வருகின்றோம். அவ்வாறே இந்த மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர்களின் வெளியேற்றம் தொடர்பாக கடந்த காலங்களில் நாங்கள் சுகாதாரத் துறைக்கும் அரசாங்கத்துக்கும் முன்மொழிவுகளை வழங்கியிருந்தோம்.

அது உத்தியோகபூர்வமான கூட்டங்களில் பரிசீலிக்கப்படுவதாக கூறப்பட்டபோதும் எந்தவிதமான முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

சுகாதார அமைச்சரின் கூற்றுக்கிணங்க 850 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்றார்கள். மேலும் ஐயாயிரம் வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளில் இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது. இவ்வாறு வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றபோது வைத்தியத்துறையில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்படப்போகிறது. இவ்வாறு ஆளணிப் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது சிகிச்சை பெறுவதற்காக வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க முடியாத நிலையும் ஏற்படலாம். இதேவேளை, குறுகிய நேரத்துக்குள் நோயாளிகளை பார்வையிடவேண்டிய நிலைமை ஏற்பட்டால் தரமான சிகிச்சையை வழங்க முடியாமல் போகலாம். இவ்வாறான பிரச்சினைகள் எங்களுடைய பிரதேசங்களில் வெகுவாக அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் என்ற ரீதியில் இவற்றை நாங்கள் முதலே ஆராய்ந்து அரசாங்கத்துக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கின்றோம். இந்த நிலை நீடிக்காமல் அரசாங்கம் விரைந்து செயல்பட்டு நாட்டிலிருந்து வைத்தியர்கள் வெளியேறுவதை தடுப்பதற்குரிய வழிகளை மேற்கொள்ளவேண்டும். இதேவேளை, எங்களுடைய வாழ்க்கைச் செலவை கொண்டுசெல்லக்கூடிய சம்பள உயர்வை வழங்குவதன் மூலம் புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தடுக்க முடியுமென நம்புகிறோம். மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்து ஏழை மக்களும் பயன் பெற்று வைத்தியர்களும் நாட்டில் நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதே எங்களின் பிரதான நோக்கமாகும் - என்றார்.

# அம்பேபிட்டியில் விசேட கூட்டம்





பேருவளை நிருபர்

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன விசேட கூட்டம் பேருவளை அம்பேபிட்டிய பாஹிம் ஹனீபாவின் இல்லத்தில் மாவட்ட தலைவர் எம்.எம்.எம்.ஜவ்பர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அரபாத் கரீம் (நளீமி) விசேட பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கொண்டார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள், முஸ்லிம் கிராமங்களில் நிலவும் குறைபாடுகள் என்பன தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

# ஆட்கடத்தல் குற்றச்சாட்டில் ஐவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுப் பகுதியில் ஆட்கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் கிளிநொச்சி, கனகாம்பிகை குளம், கரடிப்போக்கு சந்தி மற்றும் பரந்தன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுகளையுடைய ஐந்து இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வியங்காட்டுப் பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த ஒருவர் வேனொன்றில் வந்த கும்பலால் கடத்திச் செல்லப்பட்டதாக உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சனிக்கிழமை முறைப்பாடு செய்திருந்தனர். அதாவது, கிளிநொச்சியிலிருந்து வேன் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்த 12 பேர் அடங்கிய கும்பலே மேற்குறித்த வியாபாரியை கடத்திச் சென்றதாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட நபர், ஒருவரிடம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் வாங்கியதாகவும் அதனை மீளச் செலுத்தாததால் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலவிவந்த நிலையிலேயே குறித்த நபர் கடத்தப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கடத்தல் கும்பல் கிளிநொச்சியில் மறைந்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கிளிநொச்சிக்கு விரைந்த பொலிஸார் கடத்தல் கும்பல் என சந்தேகிக்கப்படும் ஐவரை கைதுசெய்ததுடன், கடத்தப்பட்டவரையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.





சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் அஹதிய்யா பாடசாலையின் பரிசளிப்பு விழா நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் சாபி சிஹாப்தீன், களுத்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர் ஹிஷாம் சுஹைல் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினர்.

படங்கள்: எம்.எஸ்.எம்.முன்தஸிர்

# கொழும்பு பெரிய பள்ளிவாசலில் விசேட இஸ்லாமிய சமய நிகழ்வு





ஏ.எஸ்.எம்.ஜாவித்

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு டேம் வீதி பொலிஸ் நிலையமும் கொழும்பு பெரிய பள்ளிவாசலும் இணைந்து நடத்திய விசேட இஸ்லாமிய சமய நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் அதன் தலைவர் தாஹிர் றசீன் தலைமையில் இடம்பெற்றது.

பள்ளிவாசலின் செயலாளர் பாரிஸ் பாஹிம், பொருளாளர் பஸால் மொஹிடீன், பள்ளிவாசலின் முன்னாள் தலைவர் தௌபீக் சுபைர் மற்றும் நிர்வாகிகளின் பங்களிப்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் டேம் வீதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆரச்சி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், பெரிய பள்ளிவாசலின் அறபுக் கல்லூரி மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பள்ளிவாசலின் தலைவர் வரவேற்புரையையும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆரச்சி பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது தின உரையையும் நிகழ்த்தினார். பள்ளிவாசலின் பிரதம இமாம் றிஸ்வான் ஹாபிஸ் விசேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டார். நன்றியுரையை பொருளாளர் பஸால் மொஹிடீன் வழங்கினார்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.09.01 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5224 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,811,344.00 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 1 4 3 6 8 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3466 — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,047,205.20 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 01 32 46 76 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 00422

Lucky 7 விசேட சீட்டிழுப்பு — சீட்டிழுப்பு இலக்கம் 0050 — திகதி 01.09.2023 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,429,935.12 — லக்வுபு அதிர்ஷ்ட இலக்கம் 1 4 1 9 1 — வெற்றி இலக்கினம் விருச்சிகம் — L7 இலக்கம் 0 2 — வெற்றி இலக்கங்கள் 8 6 1 4 1 3 — 7 Star எண்ணைப் பொருத்துவதன் மூலம் மோட்டார் சைக்கிள் வென்ற எண்கள்: 0616962, 1342838, 0958590, 0223008, 1054789, 0222089, 0007454

தன நிதானய — தேதி 2023/09/01 — சீட்டிழுப்பு இலக்கம் 1254 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,471,045.60 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 06 18 27 30 — விஷேசட ஆங்கில எழுத்து F — Double Chance இலக்கம் 14465

ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-01 — சீட்டிழுப்பு இலக்கம் 533 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,682,800.40 — வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 11 23 31 48 — விசேட இலக்கினம் மீனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1572 — 01/09/2023 — 69327 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,198,128.00 — ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 26 35 50 55 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — சனிக்கிழமை 2023.09.02 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5225 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,369,480.00 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 9 1 9 1 9 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3467 — சீட்டிழுப்பு திகதி 2023.09.02 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,047,205.20 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 22 44 49 61 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 56825

Lucky 7 — திகதி 02.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0051 — வெற்றி இலக்கினம் துலாம் — L7 இலக்கம் 0 5 — வெற்றி இலக்கங்கள் 9 5 6 4 5 0 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,495,983.76

தன நிதானய — தேதி 2023/09/02 — சீட்டிழுப்பு இலக்கம் 1255 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,684,408.80 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 04 46 55 60 — விஷேசட ஆங்கில எழுத்து H — Double Chance இலக்கம் 27484

ராசிசுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-02 — சீட்டிழுப்பு இலக்கம் 534 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00 — வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 04 31 33 34 — விசேட இலக்கினம் மீனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1573 — 02/09/2023 — 03843 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,324,036.00 — ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 17 46 49 58 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சுகாதார அமைச்சரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்





வவுனியா நிருபர்

சுகாதார அமைச்சரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கையெழுத்துப் போராட்டமானது ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்டக் கிளையால் வவுனியா, செட்டிக்குளத்தில் நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு உடனடியாகத் தீர்வு வேண்டும் எனக் கோரி பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் முகமாகவே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதுடன், தற்போதைய சுகாதார அமைச்சரை மாற்றி மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் எனக் குறித்த போராட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கத்தின் நினைவேந்தல்



பு.கஜிந்தன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 38ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆ.சி.கணேசவேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

'ஈழத்தமிழரின் சமகால அரசியல்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றினார்.

நினைவஞ்சலியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மறைந்த ஊடகர் பிரகாஷின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம்





சாவகச்சேரி நிருபர்

கொரோனா பெருந்தொற்று காரணமாக தனது 26ஆவது வயதில் மரணித்த சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (02) சாவகச்சேரியில் மாபெரும் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

பிரகாஷின் நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பழைய கட்டடத்தில் இடம்பெற்ற அஞ்சலி மற்றும் இரத்ததான முகாமில் ஊடகர் பிரகாஷின் திருவுருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது பிரகாஷின் குடும்பத்தினர், ஊடக நண்பர்கள், பிரகாஷின் நண்பர்கள், இரத்த வங்கியினர் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் இரத்ததான முகாமிலும் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியாவில் கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் படுகாயம்

வவுனியா நிருபர்

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியிலுள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற குடும்பஸ்தர் மீதே கடந்த வெள்ளிக்கிழமை (01) கரடி தாக்கியுள்ளது. கரடியின் தாக்குதலுக்குள்ளான குறித்த குடும்பஸ்தர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். கரடியின் பிடியில் இருந்து தப்பி வந்த அவரை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் பணமோசடி செய்த நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

வவுனியா நிருபர்

கனடா அனுப்புவதாகக் கூறி வவுனியாவில் பணமோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க கடந்த வெள்ளிக்கிழமை (01) வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபரொருவர் பணம் பெற்றிருந்தார்.

ஒருவரிடமிருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் 6 பேரிடம் பணம் பெற்றிருந்ததுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார். எனினும், கனடா அனுப்பாது மோசடி செய்ததாகப் பாதிக்கப்பட்ட நபர்கள் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 41 வயது நபரொருவரை வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்தனர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



பலாங்கொடை லயன்ஸ் கழகம் இப்பகுதியில் மேற்கோண்டுவரும் சமூகப் பணிகளில் ஓர் அங்கமாக பலாங்கொடை லயன்ஸ் கழக காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (01) அங்கவீனர்களான நான்கு பேருக்கு இலவச சக்கர நாற்காலிகளை அன்பளிப்பு செய்தது. இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் தலைவர் சமன் ஹெட்டியாரச்சி உட்பட மேலும் பல உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். **படம்:** ஏ.ஏ.எம்.பாயிஸ்

# மண்மேடு சரிந்து ஒருவர் பலி!

கண்டி நிருபர்

மதிலொன்றைக் கட்டுவதற்கு அத்திபாரம் வெட்டிக்கொண்டிருந்தபோது மண்மேடு சரிந்து நேற்று (03) ஒருவர் பலியானதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான விமல் ஜயசிறி (வயது-62) என்பவரே மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஒரு கூலித் தொழிலாளி என்றும் அவர் நாவலப்பிட்டி உயர் நீர்ப் பகுதியில் வீடொன்றுக்கு மதில் கட்டுவதற்கு அத்திபாரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, மழை காரணமாக மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்மேட்டின் கீழ் சிக்கிய நபரை பிரதேச வாசிகள் மீட்டெடுத்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு சடலத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் போட்டியில் பங்குகொள்ளச் சென்ற சிறுவர் காப்பக 16 வயதுச் சிறுமியை காணவில்லை

கண்டி நிருபர்

குளியாப்பிட்டியவில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியை அடுத்து அதில் பங்குகொள்ளச் சென்ற 16 வயது சிறுவர் காப்பகத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் (2) காணாமற்போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுப்பொத்த எரோமா சிறுவர் காப்பகத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மஹவ நீதிமன்ற உத்தரவின்கீழ் இவர் மேற்படி காப்பகத்தில் தங்கவைக்கப்பட்ட நிலையில், வடமேல் மாகாண சிறுவர் காப்பக சிறுவர்களுக்கிடையிலான விளையாட்டப் போட்டி ஒன்று குளியாப்பிட்டிய சில்ப சாலிகா மைதானத்தில் இடம்பெற்றது. அதில் பங்குகொள்ளச் சென்ற நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரிப்பர் லொறி - டிபென்டர் விபத்து: ஆறு பேர் படுகாயம்; ஆபத்தான நிலையில் இருவர் வைத்தியசாலையில்!

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி- பலாங்கொடை வீதியில் உடகம என்ற இடத்தில் இடம்பெற்ற டிபென்டர் ஜீப் ரிப்பர் லொறி விபத்தில் படுகாயமடைந்த 6 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (29) இடம்பெற்ற இவ்விபத்தில் டிபென்டரில் பயணித்த 5 பேரும் ரிப்பர் லொறியின் சாரதியுமே படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் டிபென்டரில் பயணித்த இளைஞரும் யுவதியும் ஆபத்தான நிலையில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய நால்வரும் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



விபத்தில் காயமடைந்த அனைவரும் எகலியகொடை, பம்பஹின்ன, ஓப்பனாயக்க பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். டிபென்டர் ஜீப் சாரதியின் அலட்சியத்தன்மையே இவ்விபத்துக்குக் காரணமென ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஓப்பனாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

# பலாங்கொடை நொன்பேரியல் தோட்ட வீதிகள் சிதைவு

## திருத்தித் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள்



ஏ.ஏ.எம்.பாயிஸ்

இலங்கையில் மிக உயரமான கிராமம் எனக் கூறப்படும் பலாங்கொடை, நொன்பேரியலில் உள்ள தோட்டத்து வீதிகள் மிகவும் பழுதடைந்து - சிதைந்து காணப்படுவதால் பிரதேச பொதுமக்கள் மாத்திரமன்றி, பாடசாலை மாணவர்களும் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவ்வீதியில் வாகனங்கள் கூடப் பயணிப்பது மிகவும் கஷ்டமானதாக இருக்கிறதென்று பிரதேச மக்கள், பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு உரியவர்களிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

நெக்ட்ரெஸ்ட் கிராமம் மற்றும் நொன்பேரியல் தோட்டத்துக்கு செல்லும் சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான ஒடுங்கிய வளைவுகளைக்கொண்ட இந்த ஆபத்தான வீதியின் பல இடங்கள் உடைந்து சிதைவடைந்து காணப்படுகின்றன. பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்துகொள்வதற்கு 15 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து அண்மித்த பட்டினங்களான பெலிஹுல்ஓய, பம்பஹின்ன ஆகிய நகரங்களை நாடி இங்குள்ள மக்கள் செல்வது வழக்கம். ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் பலாங்கொடையிலிருந்து மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலையான இ/விவேகானந்தா தமிழ் வித்தியாலயம் வரை போக்குவரத்துச் செய்யும் இந்த இ.போ.ச. பஸ்கள் அடிக்கடி பழுதடைவதும் வேறு காரணங்களுக்காக சேவையை நிறுத்துவதும் வழக்கம்.

மக்கள் சொல்லொணா கஷ்டங்களுக்கு மத்தியில் செல்வதும் நொன்பேரியல் தோட்டத்தில் அமைந்துள்ள மேற்படி தமிழ் பாடசாலைக்கு வரும் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, மேற்படி கிராமங்களின் மற்றும் நொன்பேரியல் தோட்ட மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மின்சாரக் கம்பியில் சிக்கி பெண்ணொருவர் பலி!

கண்டி நிருபர்

விவசாய காணியில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்குண்டு பெண்ணொருவர் ஸ்தலத்திலேயே நேற்று (03) பலியாகியுள்ளார்.

நுவரெலியா சாந்திபுர பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு இறந்தவர் மைக்கல் எக்லஸ் என்ற (வயது - 45 ) 3 பிள்ளைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளது. தனது விவசாய தோட்டத்துக்கு மரக்கறி வகைகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக போடப்பட்டிருந்த மின்சாரக் கம்பியை அப்புறப்படுத்த முயற்சி செய்தபோது மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளதாகத் தெரியவந்தது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



**கினிகத்தேன, கடவளை பகுதியில் வீதியின் குறுக்கே மரமொன்று சரிந்து வீழ்ந்ததன் காரணமாக ஹட்டன் பிரதான பாதையில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் பெய்த கடும் மழையால் குறித்த மரம் சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் கண்டி, ஹட்டன், கொழும்பு போன்ற இடங்களுக்குப்பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனரக வாகனங்களுக்கும் வீதியை கடக்க முடியாத நிலை காணப்படுகின்றது.**

**படம்:** கண்டி நிருபர்

# சடலம் மீட்பு

கண்டி நிருபர்

தம்பதெனிய பிரதேசத்தில் தோட்டமொன்றிலிருந்து சடலம் ஒன்று நேற்று (03) மீட்கப்பட்டுள்ளது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்படி சடலத்தை மீட்டுள்ளனர். மரணித்தவர் தேக்கவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது கொலை செய்யப்பட்ட சடலமாக இருக்கலாம் எனவும் மேற்படி கொலைக்கு சட்ட விரோத உறவு காரணமாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் மஹஓயா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட தர்மன்



சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழரான தர்மன் சண்முகரத்னம் (வயது 66) தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலிமா யாக்கூப்பின் 6 ஆண்டு பதவிக்காலம் எதிர்வரும் 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையொட்டி, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், பிரதமர் லீ ஹசியன் லூங்கின் ஆளும் மக்களின் செயல் கட்சி ஆதரவுடன் இலங்கை வம்சாவளி தமிழரான தர்மன் சண்முகரத்னம் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சீன வம்சாவளிகளான நிக் காக் சாங்க் மற்றும் டான் கின் லியான் ஆகியோர் போட்டியிட்டனர்.

2011இற்குப் பின்னர் 12 ஆண்டுகள் கழித்து ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆர்வமுடன் வாக்களித்தனர். 24.8 இலட்சம் வாக்குகள் பதிவான நிலையில், 70.4 சதவீத வாக்குகளைப் பெற்ற தர்மன் சண்முகரத்தினம் அமோக வெற்றி பெற்றார். நிக் காக் சாங்க் 15.72 சதவீதம் மற்றும் டான் கின் லியான் 13.88 சதவீத வாக்குகளையும் பெற்றனர்.

இதன் மூலம், சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக தர்மன் சண்முகரத்னம் அறிவிக்கப்பட்டார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னம் 1957ஆம் ஆண்டு சிங்கப்பூரில் பிறந்தவர். இவரது தந்தை, இலங்கைத் தமிழரான கனரத்னம் சண்முகரத்னம் சிங்கப்பூரின் பிரபல நோயியல் மருத்துவராக இருந்தவர். மிகச்சிறந்த பொருளாதார வல்லுநரான தர்மன் சண்முகரத்னம், கடந்த 2001ஆம் ஆண்டு தனது அரசியல் பயணத்தைத் தொடங்கியவர். ஆளும் மக்களின் செயல் கட்சி சார்பில் போட்டியிட்டு எம்.பியானார். அதைத் தொடர்ந்து 20 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் 2011 முதல் 2019 வரை துணைப் பிரதமராகவும் சிங்கப்பூர் நாணய சபையின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதி அமைச்சர், கல்வி அமைச்சர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக சமீபத்தில் அவர் மக்களின் செயல் கட்சியிலிருந்து விலகினார்.

# 'ஸ்லீப் மூட்'க்குச் சென்ற பிரக்யான்: மீண்டும் செப். 22இலேயே விழிப்பு



பிரக்யான் ரோவர் தனது பணிகளை வெற்றிகரமாக முடித்துவிட்டு 'ஸ்லீப் மூட்' நிலைக்குச் சென்றுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி ஏவப்பட்ட சந்திரயான்-3 விண்கலம் கடந்த ஓகஸ்ட் 23ஆம் திகதி நிலவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

இந்நிலையில், சந்திரயான்-3இன் விக்ரம் லேண்டரிலிருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் நிலனின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்று ஆய்வு மேற்கொண்டது. நிலவின் தென்துருவத்தில் பிரக்யான் ரோவர் 100 மீற்றர் தூரம் பயணித்துள்ளது. நிலவில் அடுத்த 14 நாட்கள் இரவுப்பொழுதாக இருக்கும் என்பதால் ரோவர் 'ஸ்லீப் மூட்' நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ரோவரின் பெட்டரி முழுமையாக சார்ஜ் செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் செப்டெம்பர் 22ஆம் திகதி சூரிய உதயத்தின்போது சோலார் பேனல் ஒளியைப் பெறும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. ரிசீவரும் ஒன் செய்யப்பட்டுள்ளது. பணியை மீண்டும் தொடர்வதற்காக ரோவர் விழித்துக் கொள்ளும் என எதிர்பார்ப்பதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# ஆதவனை தேடி பயணத்தை ஆரம்பித்த ஆதித்யா - எல்1






சூரியனை ஆராய்வதற்கு இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலத்தின் இரண்டாம் கட்ட சுற்றுவட்டப்பாதை உயரம் நாளை (05) அதிகாலை 3 மணிக்கு அதிகரிக்கப்படவுள்ள நிலையில், நேற்று (03) முதற்கட்ட சுற்றுவட்டப்பாதை உயரம் வெற்றிகரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என இஸ்ரோ அறிவித்துள்ளது.

பி.எஸ்.எல்.வி. சி-57 ரொக்கெட் மூலம் நேற்றுமுன்தினம் (02) விண்ணில் செலுத்தப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம், திட்டமிட்டபடி 'ஒரு மணி நேரத்தில் ரொக்கெட்டிலிருந்து பிரிந்து பயணத்தைத் தொடங்கியது.

பின்னர் புவி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. இந்நிலையில், ஆதித்யா எல்1 விண்கலம் சிறப்பான முறையில் செயற்படுவதாகவும், முதல்கட்ட சுற்றுவட்டப்பாதை உயரம் வெற்றிகரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.

**வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த ஆதித்யா - எல்1**

சூரியனை ஆராய்வதற்காக இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனத்தால் 'ஆதித்யா எல் 1' விண்கலம் சென்னையை அடுத்துள்ள ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் (02) பகல் 11.50 மணியளவில் பி.எஸ்.எல்.வி. சி-57 ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்து.

விண்கலம் ஏவப்பட்டதிலிருந்து சரியான பாதையில் பி.எஸ்.எல்.வி. சி-57 ரொக்கெட் பயணித்தது. ஒவ்வொரு கட்டமும் சரியாக இயக்கப்பட்டு ரொக்கெட்டின் பாகங்கள் திட்டமிட்டபடி பிரிந்தன.

ஏவப்பட்டு சுமார் ஒரு மணி நேரம் கடந்த நிலையில், ஆதித்யா எல் 1 செயற்கைக் கோள் பி.எஸ்.எல்.வி. சி-57 ரொக்கெட்டிலிருந்து பிரிந்து பூமியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

**சாதித்த தமிழ்ப் பெண்**

இதனையடுத்து ஆதித்யா எல் 1 திட்டம் வெற்றிகரமாக அமைந்திருப்பதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் அதிகாரபூர்வமாக அறிவித்தார். திட்ட இயக்குநரான தமிழகத்தைச் சேர்ந்த நிகர் ஷாஜிக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

ஆதித்யா எல் 1 திட்டம் உலக விஞ்ஞானிகளுக்கு பலனளிக்கும் வகையில் இருக்கும் என திட்ட இயக்குநரான நிகர் சுல்தானா ஷாஜி குறிப்பிட்டார்.

நிகர் சுல்தானா ஷாஜி தென்காசி மாவட்டத்தின் செங்கோட்டையில் பிறந்து சூரியனை ஆய்வுசெய்யும் இந்தியாவின் முதல் விண்கலமான ஆதித்யா எல்1 திட்ட இயக்குனராக உயர்ந்து சாதித்துள்ள தமிழ்ப் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

பூமியின் சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதும் ஆதித்யா எல் 1 கோளின் சோலார் பேனல்கள் எனப்படும் சூரிய மின் உற்பத்தித் தகடுகள் வெற்றிகரமாக திறந்தன. அதன்மூலம் தனக்கான மின் உற்பத்தியை ஆதித்யா எல் 1 வெற்றிகரமாக துவக்கி யிருப்பதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

பூமியை சுற்றத் தொடங்கியுள்ள ஆதித்யா எல் 1 கலத்தின் முதற்கட்ட சுற்றுவட்டப்பாதை உயரம் உயர்த்தும் நடவடிக்கை நேற்று பகல் 11.45 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது. படிப்படியாக சுற்றுப்பாதையை உயர்த்தி எல் 1 புள்ளியை நோக்கி ஆதித்யா செயற்கைக்கோள் அனுப்பப்படும். இன்னும் 125 நாட்கள் பயணம் செய்து திட்டமிட்ட எல் 1 புள்ளியை ஆதித்யா எல்1 அடையும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.



15 இலட்சம் கிலோ மீற்றர் தொலைவை ஆதித்யா எல் 1 கடந்து, சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான சம ஈர்ப்பு விசை கொண்ட எல் 1 புள்ளியிலிருந்தபடி விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளது. எல் 1 புள்ளியை ஆதித்யா எட்டி ஆய்வுப் பணிகளை துவக்கியதும் சூரியனை ஆராயும் 4ஆவது நாடு என்ற பெருமையை இந்தியா எட்டவுள்ளது.

# விண்ணுக்குச் செல்ல தயாராகும் இஸ்ரோவின் ககன்யான்



சந்திரயான் 3 மற்றும் ஆதித்யா எல் 1 வெற்றிகளைத் தொடர்ந்து அடுத்த மாதத்தில் ககன்யானை செலுத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

ககன்யானை அடுத்த மாதமே செலுத்தும் வாய்ப்பு இருக்கின்றது என இந்திய மத்திய இணை அமைச்சர் ஜிதேந்தரா சிங் தெரிவித்துள்ளார்.

பூமியின் சுற்றுவட்டப் பாதையில் 400 கிலோமீற்றர் உயரத்திற்கு 3 பேரை அனுப்பி மூன்று நாட்களுக்குப் பின்னர் பத்திரமாக பூமிக்குத் திரும்ப அழைத்து வருவதே ககன்யானின் பிரதான இலக்காகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக செய்திகள்

# 'லூனா-25' வீழ்ந்த இடத்தில் 10 மீற்றர் அளவில் பள்ளம்




நிலவின் தென் துருவ பகுதியை ஆராய ரஷ்யாவால் அனுப்பப்பட்ட லூனா-25 நிலவில் தரையிறக்குவதற்கு முன்னரே கீழே விழுந்து நொறுங்கியது.

அந்த இடத்தை நிலவைக் கண்காணித்து வரும் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் ஆர்பிட்டர் படம்பிடித்துள்ளது. லூனா -25 விண்கலம் தரையிறங்க வேண்டிய இடத்துக்கு அருகில் புதிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால், இது லூனா-25 விண்கலம் வீழ்ந்த இடமாக இருக்க வாய்ப்புள்ளது என முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய பள்ளம், 10 மீற்றர் அகலத்தில் உள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகம் திறப்பு

தேர்தல்கள் ஆணைக்குழுவின் யாழ்ப் பாணம் மாவட்டத்துக்கான அலுவலகம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தது டன் பெயர்ப்பலகை, நினைவுப் படிகம் என்பவற்றையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ





ரத்நாயக்க,யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அமல்ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தர்கா நகரில் கருத்தரங்கு



பேருவளை நிருபர்

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் நடத்திய இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அல் - ஹம்ரா மகா வித்தியாலயம் மற்றும் அளுத்கம வீதி முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு மேற்படி கல்வி நிலையத்தில் நடைபெற்றது. மேற்படி கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் ஆரம்பித்து வைத்த இக்கருத்தரங்கில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த பிரபல ஆசிரியர் முஹம்மத் அர்ஷத் வளவாளராகக் கலந்து கொண்டார்.

மேற்படி கல்வி நிலையம் வருடாந்தம் கல்விக் கருத்தரங்குகளை நடத்துவதோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து பரிசில்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து 11 வைத்திய நிபுணர்கள் வெளிநாடு சென்றுள்ளனர்

## அரச வைத்திய சங்கக் கிளைச் செயலாளர் அரங்கன் தெரிவிப்பு

வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து 11 வைத்திய நிபுணர்களும் 08 வைத்தியர்களும் வெளிநாடு சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச வைத்திய சங்கக் கிளைச் செயலாளர் வைத்தியர் அரங்கன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இவர்களுள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வைத்தியர்களும் அடங்குகின்றனர். இதேவேளை, விசேட வைத்திய நிபுணர்கள் 272 பேரும் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடி, வேலை செய்வதற்கான பொருத்தமான வளங்கள் இன்மை, இடவசதிகள் போதாமை போன்றனவே இதற்குக் காரணமாகும்.



தற்போது பிரதான வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகிறது. வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணர் கூட இல்லை. வவுனியா பிரதேசத்துக்கு வெளியே உள்ளவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கே வருகிறார்கள். ஆளணிப்பற்றாக்குறை வவுனியா வைத்தியசாலையிலும் ஏற்படுமாகவிருந்தால் நிலைமை மோசமாக அமையும்.

வவுனியா பொது வைத்தியசாலைக்கு வைத்திய நிபுணர் ஒருவர் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய நியமனக் கடிதத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களையும் பார்க்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒரு வைத்திய நிபுணர் எவ்வாறு 4 மாவட்டங்களைப் பார்க்க முடியும்? வைத்தியர்களுக்கான வேலைசெய்யக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் இன்னும் பல வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லக் கூடிய நிலைமை ஏற்படும்.இதனைத் தடுக்க வேண்டுமானால் அவர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவர்கள் விருப்பத்துடன் வேலைசெய்யக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து 11 வைத்திய நிபுணர்களும் 05 சாதாரண வைத்தியர்களும் வவுனியா மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து 03 சாதாரண வைத்தியர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இந்நிலையை அரசாங்கம் தொடரவிடக்கூடாது. எமது சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் முன் வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# உழவு இயந்திரம் விபத்து; சிறுவனொருவன் உயிரிழப்பு

வவுனியா, பூவரசங்குளம், மதுக்குளம் பகுதியில் உழவு இயந்திரம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 15 வயதுடைய சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு சிறுவன் படுகாயமடைந்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இரண்டு சிறுவர்கள் உழவு இயந்திரத்தின் பின்னால் பயணித்துள்ளனர். இதன்போது கட்டுப்பாட்டையிழந்த உழவு இயந்திரம் மதுக்குளம் பகுதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 15 வயதுகளையுடைய இரண்டு சிறுவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிச்சை பெற்று வந்த நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார். பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.சதுஷான் என்ற சிறுவனே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கல்முனையில் இரவு நேர வகுப்புகளுக்குத் தடை

## அஹதியா, அறநெறிப் பாடசாலை நேரத்தில் இடம்பெறும் பிரத்தியேக கற்றலை நிறுத்தவும் மாநகர சபை நடவடிக்கை





சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை பிரதேசத்தில் இடம்பெறும் தரம்-1 முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரையான மேலதிக வகுப்புகள் மாலை 6.00 மணியுடன் நிறைவுசெய்ய வேண்டும் என்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள் மாலை 6.30 மணியுடன் நிறைவுசெய்யப்பட வேண்டுமென்றும் கல்முனை மாநகர சபை தீர்மானம் எடுத்துள்ளது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் இடம்பெறும் மேலதிக வகுப்புகளை முறையாக ஒழுங்குபடுத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் மாநகர சபை கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் நெறிப்படுத்தலில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உட்பட அதிகாரிகள் பலரும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள், நடத்துனர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தற்கால சூழ்நிலையில் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களைக் கருத்திற்கொண்டு முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பாடசாலை நேரங்களில் எக்காரணம் கொண்டும் மேலதிக வகுப்புகள் நடத்தப்படக் கூடாது. ஞாயிறு தினங்களில் அஹதியா மற்றும் அறநெறிப் பாடசாலை நடைபெறும் நேரத்திலும் மேலதிக வகுப்புகள் நடத்தப்படக்கூடாது.

தரம்-1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரையான மேலதிக வகுப்புகள் மாலை 6.00 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும் என்றும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள் மாலை 6.30 மணியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான டியூசன் வகுப்புகளை மாத்திரம் செப்டெம்பர் 30ஆம் திகதி வரை இரவு 9.00 மணிவரை நடத்த நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் சுகாதார மற்றும் காற்றோட்ட சூழலைக் கொண்டிருப்பதுடன் அங்கு கட்டாயம் ஆண், பெண்களுக்கென தனித்தனியான மலசல கூடங்கள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் இட நெருக்கடியற்ற வகையில் போதிய தளபாட வசதிகள் இருத்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும். இத்தீர்மானங்களை மீறும் பிரத்தியேக கல்வி நிலைய நடத்துனர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்படாத பிரத்தியேக கல்வி நிலையங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர ஆணையாளரினால் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

அதேவேளை, தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களிடம் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் அடுத்த கூட்டத்தில் தீர்மானிப்பதென இதன்போது முடிவு செய்யப்பட்டது.

# மீண்டுமொரு கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே செயற்படுகிறார்கள்

## தென்னிலங்கை அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் மீது கலையரசன் எம்.பி. குற்றச்சாட்டு

வாழைச்சேனை செய்தியாளர்



நாட்டில் மீண்டுமொரு கலவர சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே தென்னிலங்கையிலுள்ள சில அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் செயற்படுகின்றார்கள். இந்த விடயத்தில் சகலரும் மிக அவதானமாக இருக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பெரிய நீலாவணையில் இடம்பெற்ற மின்னொளி கிரிக்கெட் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயத்துக்கு கல்வியுடன் சேர்த்து விளையாட்டையும் ஊக்கப்படுத்த வேண்டும். எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு கிராமத்தில் விளையாட்டுத்துறையில் 80 சதவீத மானவர்களை உருவாக்கிய பெருமைகளும் இருந்திருக்கின்றன.

எமது இளைஞர்கள் அயராத முயற்சியும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக இருந்தால்தான் எதிர்காலத்தில் இந்த சமூகத்திலே நாங்கள் வாழ முடியும். குறிப்பாக, இந்த நாட்டில் தற்போதிருக்கின்ற பொருளாதார ரீதியில் அதிகமான இளைஞர்கள் வெளிநாடு செல்வதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் எமது நாடு மிகவும் மோசமானதொரு சூழலைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூழல் இன்னும் நீடிக்குமானால் மக்கள் மத்தியில் இதைவிட மேலும் மோசமான வறுமைநிலை ஏற்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

போரால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலையைச் சந்தித்திருந்தும் அது போன்றதொரு கலவர சூழலை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்றே தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளும் மதத்தலைவர்களும் செயற்படுகின்றார்கள். இதிலும் நாங்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

இளைஞர்கள் இவ்வாறான விடயங்களையெல்லாம் கருத்திற்கொள்ளாது அவர்களின் வலைக்குள் சிக்குண்டுவிடாது எமது பிரதேசத்தில் எமது உரிமை, கல்வி உட்பட ஏனைய பொருளாதார ரீதியான வளர்ச்சியிலே முன்நின்று உழைக்க வேண்டும்.

ஆனாலும் எமது இளைஞர்களுக்கான வளங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. எதிர்காலத்தில் அதனையும் நாங்கள் நிவர்த்தி செய்து எமது இளைஞர் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் - என்றார்.

கிழக்கு செய்திகள்
easttthamilan@gmail.com

# மு.கா.அழிந்துபோய்விட்டது என்று கூறுபவர்கள் இருந்தாலும் இன்னும் கட்சியின் எழுச்சியும் வீரியமும் குறையவில்லை

## கலாநிதி சிராஸ் மீராசாஹீப் தொடர்பிலும் கட்சித் தலைவர் ஹக்கீம் பாராட்டி உரை















கோணாவத்தை நிருபர் றிபாஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழிந்து போய்விட்டது என்று சொல்பவர்கள் மத்தியில் இந்தக் கூட்டம் சொல்லும் செய்தி, கட்சியின் எழுச்சியையும் வீரியத்தையும் வெளிப்படுத்தியுள்ளது என்றும் கலாநிதி சிராஸ் மீராசாஹீப், மேயர் பதவியிலிருந்து விலகுமாறு நாங்கள் கோரிய போது மிகவும் கண்ணியமாக அவரது பதவியை இராஜினாமா செய்து கொண்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் சிரார்த்த தின நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்துவது தொடர்பாக இடம்பெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். முன்னாள் கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹீப் தலைமையில் அவரது இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்தில் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழிந்து போய்விட்டது என்று சொல்பவர்கள் மத்தியில் இந்தக் கூட்டம் சொல்லும் செய்தி, கட்சியின் எழுச்சியையும் வீரியத்தையும் வெளிப்படுத்தியுள்ளது என்றே நான் நினைக்கிறேன். கலாநிதி சிராஸ் மீராசாஹீப் மெட்ரோ பொலிடன் கல்லூரியினுடைய பட்டமளிப்பு விழாவை நடத்துவதை நான் அவதானித்திருக்கிறேன். அதனை அவர் பெரும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களை விடவும் நேர்த்தியாகவும் ஒழுங்குமுறையாகவும் நடத்துவார். அவர் தனக்கு வழங்கப்பட்ட பணியை நேர்த்தியாகச் செய்வார் என்பது நாம் மேயர் பதவி வழங்கியதிலிருந்து அறிந்த விடயம். கட்சியிலிருந்து விலகிச் சென்று இன்று மீண்டும் இணைந்துள்ள இருவர் மூலமாக கட்சி பெரும் உற்சாகமடைந்திருக்கிறது. அவர்கள் கலாநிதிகளான எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், சிராஸ் மீராசாஹீப் ஆவார்கள். அவர்கள் இருவரும் இந்தக் கட்சியில் மிகப்பெரும் மக்கள் செல்வாக்கைக் கொண்டவர்கள்.

செப்டெம்பர் 16 மறைந்த பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பை இழந்த நாளாகும். அவரது மறைவின் சோகம் இன்னும் எங்களை தொடர்ந்தும் பாதித்துக்கொண்டிருக்கிறது. அவருடைய நினைவு தினத்தை கட்சியின் புதிய யுகத்துக்கான ஆரம்பமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது கட்சி முக்கியஸ்தர்கள் பலரதும் விருப்பமாகும்.

அதற்கமைய, சில இடங்களில் கட்சிக்கு தொய்வுநிலை ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை உறுதிநிலைக்கு கொண்டுவருவதற்கு இந்த ஞாபகார்த்த நிகழ்வைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். தற்போது முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அணியாக ஒற்றுமையாகியிருப்பது கட்சிக்குப் பெரும் உத்வேகத்தை உருவாக்கியிருக்கின்றது - என்றார்.

இந்நிகழ்வில் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் உரையாற்றுகையில்,

மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் நினைவேந்தல் விழாவை சாய்ந்தமருது மண்ணில் நடத்துவதற்கு அனுமதியளித்து அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய கட்சித் தலைமைக்கும் உயர் பீடத்துக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையில் சாய்ந்தமருது சார்பாக கட்சிக்கு 90 வீதமான வாக்குகளை நாம் பெற்றுக் கொடுத்திருந்தோம். அதேபோன்ற ஓர் எழுச்சியை மீண்டும் இந்த மண்ணில் தலைவரது நினைவேந்தல் நிகழ்வு மூலமாக சாதித்துக்காட்ட இருக்கிறோம். இந்தக் கட்சியிலிருந்து தூரமாகியிருக்கும் கட்சித்தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் இந்தப் பிரதேசத்தில் மீண்டும் ஒன்றிணைத்து புதிய உற்சாகத்துடன் செயற்பட நாங்கள் தயாராகவிருக்கிறோம். இந்த ஒற்றுமையை இப்பிரதேசத்தில் ஏற்படுத்துவதற்காக நாங்கள் எதையும் விட்டுக் கொடுக்கத் தயங்கமாட்டோம்.

பதவி, பட்டங்கள் இறைவன் நாட்டத்தால் கிடைப்பவை. இவற்றுக்காக நாங்கள் அரசியல் செய்ய வரவில்லை, சமூகத்தின் விடிவுக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காக செயற்படக்கூடிய கட்சியை உருவாக்கவும் வளர்க்கவுமே நாங்கள் இந்த அரசியலில் இணைந்திருக்கிறோம்.

அந்தவகையில், ஒரு பெரும் விழாவாக இந்த சிரார்த்த தினத்தை நிகழ்த்திக் காட்டுவதோடு சாய்ந்தமருது மக்களின் ஒற்றுமையை மீண்டும் உலகறியச் செய்வதற்கு சாய்ந்தமருது மக்கள் என்னோடு பூரண ஒத்துழைப்பு தருவதுடன், விழா ஏற்பாடுகளிலும் பங்கெடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஸ்ரீல.மு.காங்கிரஸின் தவிசாளர் அப்துல் மஜீத், பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் ஹாசீம், எம்.எஸ்.தௌபீக், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வை உட்பட அரசியல் உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# பொரலுகந்த ரஜமகா விகாரையை எதிர்த்து திருகோணமலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## 14 பேருக்கு தடையுத்தரவு - நீதிமன்ற உத்தரவை மீறியும் மக்கள் எதிர்ப்பு கோஷம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை-இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (03) மனித சங்கிலிப் போராட்டமொன்று திருகோணமலை, சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உட்பட பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இலுப்பைக்குளம், பெரியகுள சந்திக்கு அண்மையில் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகின்ற விகாரைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக "பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?"

**"பெரியகுளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து", "தொல்லியல் திணைக்களம் பௌத்தத்திற்கு மட்டுமா?", "தொல்லியல் திணைக்களமே இனவாதத்தை தூண்டாதே"**

போன்ற வாசகங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் முகமாக திருகோணமலை – நிலாவெளி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற தடையுத்தரவு விண்ணப்பத்தின் அடிப்படையில் திருகோணமலை நீதவான் நீதிமன்றினால் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்கு 14 பேருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை பிரசாத், தமிழ்ப் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஸ் நிக்லஸ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குச்சவெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மற்றைய தரப்பாக பௌத்த பிக்குகள் உட்பட 7 பேருக்கும் எதிராக இத்தடை உத்தரவு





பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலாவெளி பொலிஸாரினால் குறித்த தடையுத்தரவு வாசித்துக்காட்டியதையடுத்து திருகோணமலை - நிலாவெளி வீதியின் சாம்பல்தீவு சந்திப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சாம்பல்தீவு பாலத்திற்கு அப்பால் சென்று தமது எதிர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

திருகோணமலை, இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்ணளவாக 540 குடும்பங்களைச் சேர்ந்த 2,202 தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன், இதனைச் சூழவுள்ள பெரியகுளம், ஆத்திமோட்டை, சாம்பல்தீவு மற்றும் சல்லி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மட்டுமே காலாகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

சிங்கள பௌத்தர்கள் இல்லாத இப்பிரதேசத்தில் பௌத்த விகாரை நிறுவப்படுமானால் அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து இன வன்முறைக்கும் வித்திடும் என மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும், சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஸ், செயலாளர் சட்டத்தரணி காண்டீபன் மற்றும் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கே.குகன் உட்பட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மறைந்த மயோன் முஸ்தபாவுக்கு கல்முனையில் ஜனாஸா தொழுகை





எம்.என்.எம்.அப்ராஸ்

மறைந்த முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபாவுக்கு காயிப் ஜனாஸாத் தொழுகையும் விசேட துஆ பிரார்த்தனையும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிருவாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அல்ஹாஜ் மௌலவி டி.ஆர்.நௌபர் அமீனால் தொழுகை நடத்தப்பட்டு துஆ பிராத்தனையும் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ.அஸீஸ் கலந்து கொண்டு நினைவுரையாற்றுகையில்,

மக்களுக்காக அரசியலில் பயணத்தை ஆரம்பித்தவர் மறைந்த முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபா. அவர்கள் தனது செல்வத்தின் மூலமும் தனது அரசியல் பதவியின் மூலமும் மக்கள் பணிக்காக உயர்வைக் கண்டும்,பல சிரமங்களை எதிர்கொண்டும் இறுதிவரை மக்களுக்கு உதவி செய்தவராவார். கல்முனை பிரதேச மக்களுக்கு பல திட்டங்களை மக்கள் நலனுக்காக அறிமுகம் செய்தவர்.இப்பிரதேச மாணவர்களின் நலன் கருதி கணினி கல்வியைக் கொண்டுவந்தவர். இதன்மூலம் பலர் பயன் பெற்றனர். மேலும் வெளிநாடு செல்வோருக்கு பயன்பெறவேண்டி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை எமது பிரதேசத்தில் அமைத்து அதில் எமது பிரதேச மக்களும் நாட்டு மக்களும் பயன்பெற்றதுடன்,எமது பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள பொதுச் சந்தையை ஆரம்பித்து வைத்து பங்களிப்பு செய்தவராவார். எல்லோருடனும் மிகவும் என்றும் அன்புடன் இருந்தவர். இவருக்காக பிராத்திப்போம் என்றார்.

இதன்போது முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபாவின் புதல்வர் ரிஸ்லி முஸ்தபா மற்றும் குடும்பத்தினர், அதிகளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்டத்தில் மறைந்த முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எம்.மயோன் முஸ்தபா பல்வேறு சேவைகள் புரிந்து மக்கள் மனதில் நீங்காத ஓர் அரசியல்வாதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீ விபத்தில் வயோதிபர் பலி

மண்டூர் செய்தியாளர்

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் வயோதிபப்பெண் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் உயிரிழந் துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர். தேவாலய வீதி, களுதாவளை-02 ஐ சேர்ந்த எட்டுப்பிள்ளைகளின் தாயாரான(வயது 83 )கிருஸ்ணபிள்ளை பொன்னம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த வயோதிப பெண், தனது மகளின் வீட்டின் வளவினுள் அமைத்துக்கொடுக்கப்பட் டிருந்த குடிசையில் வாழ்ந்து வந்த நிலையில், ஏற்பட்ட தீ விபத்திலேயே இவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் சம்பவ தினத்தன்று காலை வீட்டார் அவதானித்தபோது இவர் குடிசைக்கு அருகில் தீப்பிடித்து உயிரிழந்த நிலையில் இருந்ததை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ. ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கு அமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பாவையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத் தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள் பாவனை, விற்பனைக்கு எதிரான தன்னிலைப் பிரகடனம் வெளியீடு





போதைப்பொருள் அற்ற தூய நகரமாக அக்கரைப்பற்று பிரதேசத்தை மாற்றியமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிரான தன்னிலைப் பிரகடனம் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள், அக்கரைப்பற்று ஜம்இய்யதுல் உலமா சபை, வர்த்தக சங்கம், கழகங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு அமைவாக அக்கரைப்பற்றில் உள்ள ஜும்ஆ பள்ளிவாசல்களில் போதை ஒழிப்பு விஷேட குத்பா பேருரை இடம்பெற்றதுடன், இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் போதை ஒழிப்பைத் தெளிவுபடுத்தும் விஷேட விழிப்புணர்வு உரைகளும் மாணவர்கள் மத்தியில் துறைசார் முக்கியஸ்தர்களால் நிகழ்த்தப்பட்டன.

அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆ பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகை நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஒன்று திரண்ட பெருந் தொகையான பொதுமக்கள், இளைஞர்கள், சிறுவர்கள் போன்றோர் அக்கரைப்பற்று பிரதான வீதி ஊடாக பேரணியாக மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டாரத்தை அடைந்தனர்.

அப்பிரதேசத்தில் ஒன்று சேர்ந்து அங்கு இடம்பெற்ற விஷேட போதை ஒழிப்பு பேருரை நிகழ்வில் கலந்து கொண்டதுடன், இப்பிரதேசத்தில் உள்ள எவரும் இனிவரும் காலங்களில் போதைப் பொருள் பாவனையை மேற்கொள்வதில்லை எனவும் இப்போதைப் பொருள் பாவனைக்கு எதிராக செயற்படுவதெனவும், போதைப்பொருள் விற்பனை மற்றும் அதற்கு துணை நிற்பதில்லை எனவும் சமூக எழுச்சி தன்னிலைப் பிரகடனம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரிடம் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் போதை ஒழிப்பு தொடர்பான தமது மகஜர்களை கையளித்தனர்.

# வடக்கு - கிழக்கில் பார்வையற்றோருக்கான முதலாவது வீதி சமிக்ஞை விளக்கு அறிமுகம்

களுதாவளை செய்தியாளர்





வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பார்வையற்றோருக்கான முதலாவது வீதி சமிக்ஞை விளக்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நொச்சிமுனை பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்ட வீதி சமிக்ஞை விளக்கை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வீதி சமிக்ஞை குறித்த பிரதேசத்தில் உள்ள விழிப்புலனற்றோரின் போக்குவரத்துக்காக அமைக்கப்பட்டதாக அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

குறித்த இடத்தில் தரிசனம், விழிப்புலனற்றோர் பாடசாலை மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் நிலையம் ஆகியன அமையப் பெற்றிருக்கின்றன. குறித்த நிலையங்களில் நூற்றுக்கணக்கான விழிப்புலனற்ற மாணவர்களும் விழிப்புணர்வர்களும் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெள்ளைப்பிரம்பு பயன்படுத்தும் விழிப்புலனற்றோர் பிரயாணஞ் செய்வதற்காக பொதுப்போக்குவரத்து பஸ்களை நிறுத்தும் பொழுது குறித்த பஸ் சாரதிகள் பஸ்ஸை நிறுத்துவது போன்று பாசாங்கு செய்து பஸ்ஸை நிறுத்தாமலும், இவர்களை பஸ்ஸில் ஏற்றாமலும் சென்றுவிடுவதாக விழிப்புலனற்றவர்கள் போக்குவரத்து அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, இலங்கையின் எப்பாகத்திலும் இவ்வாறான விசேட தேவையுடையவர்களைக் காணும்பொழுது பஸ் சாரதிகள் அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் அல்லது அவர்களுக்காக வழிவிட வேண்டும் என இலங்கைப் போக்குவரத்து சபைத் தலைவருக்கு பணிப்புரை விடுப்பதாகத் தெரிவித்தார்.

குறித்த திறப்பு விழா நிகழ்வுகளில் இராஜாங்க அமைச்சர்களான எஸ்.ரீ. பாலகம்லட், சிவனேசதுரை சந்திரகாந்தன ஆகியோர் கலந்துகொண்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் உட்பட அதன் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம்





கிண்ணியா நிருபர்

வடகிழக்கு யுத்தத்தின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கான விசாரணை தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று(03) இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் நடைபெற்ற இவ்வாக்குமூலப் பதிவில் தம்பலகாமம்,கிண்ணியா,திருகோணமலை பட்டினமும் சூழலும்,மொறவெவ ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளைச் சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணைக்குழு முன்னிலையில் சுமார் 22 க்கும் மேற்பட்டவர்கள் வாக்கு மூலம் அளித்தனர்.

இதில் பல காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்களது வாக்குமூலங்களை அளித்ததுடன், ஆணைக்குழுவினர் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்தனர். இதில் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**பொலிஷ் அதிகாரம் வழங்க கூடாதாம் எண்டு ஜே வி பி தலைவர் அநுரகுமார திசநாயக்காவும் சொல்லிப்போட்டாரு எலுவா..?**

**ஓண்டா தம்பி தீங்கதானே 2006, ல இணைந்த வடக்கு கிழக்க மகிந்த மாமாவோட சேர்ந்து நீதிமன்றம் சென்று பிரித்தவங்க...**

**இப்ப பொலிஷ் அதிகாரம் குடுக்கவேண்டாம் என இதுவும் சொல்லுவியள் இன்னும் சொல்லுவியள் இத சொன்னத்தால சிங்கள மக்களிட வாக்குகள எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில எடுப்பீங்க எண்டது சரி...**

**ஆனா வடக்கு கிழக்கில உள்ள ஆராவது தமிழர்கள் உங்கள ஆதரிக்க இருந்தாலும் இனி நடக்காது மகனே..!**

# மு.கா. ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் நினைவு தின நிகழ்வு தொடர்பில் பல்வேறு பிரதேசங்களில் கலந்துரையாடல்







காமடுல்ல நிருபர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் 23 ஆவது நினைவு தின ஏற்பாடுகளை முன்னிட்டும், அம்பாறை மாவட்டத்தில் தொகுதிகள் தோறும் கட்சியின் கட்டமைப்பை மீளப் புனரமைப்பது தொடர்பிலுமான கலந்துரையாடல் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் (02) அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன.

முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு உறுப்பினர்கள், ஆதாரவாளர்கள் ஆகியோருக்கிடையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினராக பைஷால் காசிம், எச்.எம். எ. ஹரிஸ், எம். எஸ்.தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல். எம். ஹிஸ்புல்லா, முன்னாள் மாகாண அமைச்சர் எம். எஸ் .உதுமாலெப்பை மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அலிசாகிர் மௌலானா, எம். ஐ. மன்சூர் ஆகியோரும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# மழையால் மண்ணான இந்திய - பாக். ஆட்டம்
## முதல் அணியாக சுப்பர்-4 சுற்றுக்கு தகுதிபெற்றது பாகிஸ்தான்

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் எதிர்பார்த்திருந்த இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது.

கிட்டத்தட்ட ஓராண்டுக்கு பின் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுவதால் ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பு இருந்தது. நேற்று முன்தினம் கண்டி பல்லேகலயில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். இந்திய அணி 66 ஓட்டங்களுக்கு 04 முக்கிய விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

அதிரடியாக ஆடிய இஷான் கிஷன் 81 பந்துகளில் 82 ஓட்டங்களும் ஹார்திக் பாண்டியா 90 பந்துகளில் 87 ஓட்டங்களும் விளாசினர். இறுதியாக இந்திய அணி 48.5 ஓவர்களுக்கு 266 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பாகிஸ்தான் அணி வெற்றிபெற 267 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், இந்திய அணியின் துடுப்பாட்டம் முடிவடைந்தபோதே மழை பெய்யத் தொடங்கியது. இதனால் மைதானம் முழுக்க விரிப்புகள் விரிக்கப்பட்டு கவர் செய்யப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால், இரவு 09 மணிக்கு நடுவர்கள் பரிசோதனை செய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் மழை மட்டும் நின்றபாடில்லை. இதனால் 9.50 மணி வரை பொறுத்திருந்த நடுவர்கள், மழை காரணமாக ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவித்தனர். இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், பாகிஸ்தான் அணி சுப்பர் 04 சுற்றுக்கு முன்னேறியது. இருப்பினும் பரபரப்பு நிறைந்த இந்தியா - பாகிஸ்தான் ஆட்டம் மழையால் பாதியிலேயே கைவிடப்பட்டது ரசிகர்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# டோனியின் 12 ஆண்டு சாதனையை சமன் செய்த கிஷான்



பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்தில் இந்திய இளம் வீரரான இஷான் கிஷான் ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக நான்கு அரைச் சதங்கள் அடித்து டோனியின் சாதனையைச் சமப்படுத்தியுள்ளார்.

காயமடைந்த ராகுலுக்கு பதிலாக விக்கெட் கீப்பராக விளையாடும் வாய்ப்பை பெற்ற இஷான் கிஷான் 82 ஓட்டங்கள் எடுத்தார். கடந்த மாதம் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற ஒருநாள் தொடரின் 03 போட்டிகளிலும் அரை சதமடித்த அவர், தற்போது இந்தப் போட்டியிலும் தொடர்ந்து 4ஆவது முறையாக 50 ஓட்டங்களை கடந்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் 04 தொடர்ச்சியான போட்டிகளில் 50 ஓட்டங்கள் அடித்த இந்திய விக்கெட் கீப்பர், முன்னாள் தலைவர் எம்.எஸ்.டோனியின் 12 வருட தனித்துவமான சாதனையை சமன் செய்துள்ளார்.

# புற்றுநோயால் காலமான ஸிம்பாப்வே லெஜெண்ட்



ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர வீரருமான ஹீத் ஸ்ட்ரீக் புற்றுநோய் காரணமாக நேற்று காலை தனது 49ஆவது வயதில் காலமானார். கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஹீத் ஸ்ட்ரீக் காலமானதாக ஒரு செய்தி வெளியானதை தொடர்ந்து அது போலியான செய்தி என சக வீரர் உறுதிப்படுத்தியிருந்தார்.

முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஹீத் ஸ்ட்ரீக் ஸிம்பாப்வே அணிக்காக முதன்முதலாக டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்களை கைப்பற்றியவர் என்ற சாதனைக்குரியவர். ஹீத் ஸ்ட்ரீக் 216 டெஸ்ட் விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். ஸிம்பாப்வே அணிக்காக 65 டெஸ்ட்கள் மற்றும் 189 ஒருநாள் போட்டிகளில் அவர் விளையாடியிருந்தார்.

ஸிம்பாப்வே, பங்களாதேஷ் தேசிய அணிகளுக்கும் ஐ.பி.எல். தொடரில் குஜராத் லயன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் ஸ்ட்ரீக் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுள்ளார். எனினும், ஸிம்பாப்வே அணியின் பயிற்றுவிப்பாளராக பணியாற்றியவேளை ஊழலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 2021இல் இவருக்கு 08 வருட தடை விதிக்கப்பட்டது.

# இலங்கை மகளிர் அணிக்கு வரலாற்று வெற்றி



டி20 கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்து வரலாறு படைத்துள்ளது இலங்கை மகளிர் அணி.

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயனம் மேற்கொண்டு 03 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. டி20 தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் 2ஆவது போட்டி நேற்று முன்தினம் ஸ்லம்ஸ்போட்ர்டில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 18 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 104 ரன்களில் ஆல்அவுட் ஆனது. பின்னர் 105 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 13.2 ஓவர்களில் 02 விக்கெட் இழப்புக்கு 110 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இது சர்வதேச மகளிர் டி20 கிரிக்கெட்டில் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை அணி பதிவு செய்த முதல் வெற்றி ஆகும். இதற்கு முன்னர் விளையாடிய 10 போட்டிகளில் இலங்கை அணி தோல்வியையே சந்தித்திருந்தது. கடைசி டி20 போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

# சச்சினின் வீடு முற்றுகை



கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கர், ஏழை குழந்தைகளுக்கு தன்னால் முடிந்த உதவிகளை செய்து வருகிறார். பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில், சில வாரங்களுக்கு முன்பு பேடிஎம் நிறுவனத்தின் ஃபர்ஸ்ட் கேம்ஸ் என்ற ஃபேண்டஸி கிரிக்கெட் ஒன்லைன் ஆப் விளம்பரத் தூதுவராக சச்சின் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இந்த விளம்பரத்துக்காக அவர் நடிக்கவும் செய்துள்ளார்.

இந்நிலையில் தான், பாரத ரத்னா வென்ற சச்சின் டெண்டுல்கர் ஒன்லைன் கேமிங் ஆப் விளம்பரத்தில் நடிக்கலாமா? என்று விமர்சனம் எழுந்துள்ளது. இதன் காரணமாக மும்பையில் உள்ள சச்சின் டெண்டுல்கரது வீட்டை மகாராஷ்டிரா மாநில எம்.எல்.ஏ.ஓம் பிரகாஷ் தலைமையில் ஏராளமானோர் முற்றுகையிட்டுள் ளனர். இதையடுத்து அவரது வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்

விஸ்வநாதன் ஆனந்தை பின்னுக்கு தள்ளி தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ் இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதன் மூலமாக 37 ஆண்டுகளாக நம்பர் 1 செஸ் வீரராக இருந்த விஸ்வநாதன் ஆனந்தின் சாதனை பயணம் முடிவுற்றது. உலக தரவரிசையில் குகேஷ் 2758 புள்ளிகளுடன் 8ஆவது இடம் பிடித்துள்ளார். விஸ்வநாதன் ஆனந்த் 2754 புள்ளிகளுடன் 9ஆவது இடத்துக்கு சென்றுள்ளார். செஸ் உலக கோப்பையில் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றிய பிரக்ஞானந்தா 2727 புள்ளிகளுடன் 19ஆவது இடத்தில் உள்ளார்.

..........................................

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் அனைத்து உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் செய்த முறைப்பாட்டையடுத்து, விளையாட்டு தொழில்நுட்பக் குழுவின் உத்தரவுக்கமைய இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் சபைக்கு இதுதொடர்பில் எழுத்துமூலம் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

# ஒருநாள் தொடரை கைப்பற்றிய இலங்கை இளையோர் அணி



மேற்கிந்திய தீவுகள் இளையோர் (19 வயதுக்குட்பட்ட) அணிக்கு எதிரான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை அணி 2-1 என்ற நிலையில் கைப்பற்றியது.

முதல் ஆட்டத்தில் இலங்கையும் இரண்டாவது ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகளும் வென்றிருந்த நிலையில் மூன்றாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில் புலிந்து பெரேரா அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய புலிந்து பெரேரா தனியாளாக இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். மிகச்சிறப்பாக ஆடிய இவர் 140 பந்துகளை எதிர்கொண்டு 04 சிக்ஸர்கள் மற்றும் 17 பௌண்டரிகள் அடங்கலாக 155 ஓட்டங்களை விளாசினார்.

இலங்கை இளையோர் அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகளை இழந்து 304 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 40.3 ஓவர்களில் 253 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.




# ரோஹித், கோஹ்லியை போல்ட் செய்து சாதனை நிகழ்த்திய ஷஹீன் அப்ரிடி



இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷஹீன் அப்ரிடி, இந்திய வீரர்களான விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா ஆகியோருக்கு எதிராக மாபெரும் சாதனையை பதிவு செய்து ரசிகர்களை வியக்க வைத்துள்ளார்.

ரோஹித் சர்மா 11 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அவரை கிளீன் போல்ட் செய்தார். அதனை தொடர்ந்து இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை 27ஆக இருந்தபோது நான்கு ஓட்டங்கள் எடுத்திருந்த விராட் கோஹ்லியையும் கிளீன் போல்ட் செய்தார்.

இதன்மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் ரோஹித் சர்மா, விராட் கோஹ்லி ஆகியோரை ஒரே போட்டியில் போல்ட் செய்த முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையை ஷஹீன் அப்ரிடி படைத்துள்ளார்.

# சேனைக்குடியிருப்பு கணேஷ மகா வித்தியாலய மாணவர்கள் முதன்முறையாக தேசிய போட்டிக்குத் தெரிவு

பாண்டிருப்பு நிருபர்



நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேஷ மகா வித்தியாலய மாணவர்கள் முதன் முறையாக எறிபந்து போட்டியில் மூன்றாம் இடம்பெற்று தேசியமட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

17 வயதுக்குட்பட்ட எறிபந்து விளையாட்டில் மூன்றாம் இடம், 20 வயதுக்குட்பட்ட எறிபந்து போட்டியில் மூன்றாம் இடம் ஆகியன பெற்று முதன் முறையாக தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளனர்.

இதன்மூலம் குறித்த பாடசாலைக்கும் கிராமத்துக்கும் அம் மாணவர்கள் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இம் மாணவர்களை பயிற்றுவிக்க காரணமாக அமைந்த விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பி.ஜீவிதன் உட்பட ஆசிரியர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் அதிபர் கமலநாதன் தெரிவித்துள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7